Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 மாசி – 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1423 முஹர்ரம் 14 (24.02.2005) வியாழக்கிழமை இதழ்: 147

## அரசின் யோசனைகள் குறித்தும் பேச்சு நடத்தப்பட வேண்டுமாம்!

### ஜயந்த தனபால தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத்தமுடியாது. பேச்சு மேசையில் அரசாங்கத்தின் மாற்று யோசனைகளும் முன்வைக்கப்படும்

சமாதானப்பேச்சுக்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றங்கள் எதுவும் கிடையாது என்று அரசாங்க சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக அவர் மேலும் விளக்கமளிக்கும்போது –

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில் நேரடிப் பேச்சுக்கள் நடத்தப்படும். அதேவேளை, மாற்று யோசனைகள் குறித்தும் பேசப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் தொடர்ந்தும் உறுதியுடன் இருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு அரசாங்கம் நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இடைக்கால நிர்வாகசபைத் திட்டத்தின் அடிப்படையில் தொடர்ச்சியாக சமாதானப் பேச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நிலைப்பாடு மாறாததால் உடனடிப் பேச்சு சாத்தியமில்லை!

### அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

சமாதானப்பேச்சை ஆரம்பிப்பது தொடர்பாக தொடர்ந்தும் பழைய நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருந்து வருவதால், உடனடியாகவே பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய சூழல் காணப்படவில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு, அரசாங்கத்தின் சார்பில் தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் –

புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளின் அடிப்படையில் உடனடியாகப் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லையென்று சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்றுத் தெரிவித்தார்.

புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனையுடன் மட்டுமல்ல அரசின் மாற்று யோசனைகள் குறித்தும் பேசப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருப்பதால் – உடனடியாக பேச்சுக்கள் ஆரம்பிக்க வாய்ப்பில்லை என்றே அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக அரசாங்கம் இதே நிலைப்பாட்டில் இருப்பதால்தான் நேரடிப் பேச்சுக்கள் இழுபறிப்பட்டு வந்தன. அரசாங்கம் தொடர்ந்தும் இதே நிலைப்பாட்டில் தான் இருப்பதாக மீண்டும் வலியுறுத்தியிருப்பதால் சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக ஏற்பட வாய்ப்பில்லை என்றே அவர்கள் கருதுகின்றனர்.

# புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய ராணுவச் சிப்பாய் சுட்டுக்கொலை!

## மற்றொரு சிப்பாய் படுகாயம்; கிளாலியில் நேற்று மாலை சம்பவம்!

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் முன்னணிக் காவலரண் பகுதிக்குள் நேற்று மாலை ஆயுதங்களுடன் ஊடுருவ முற்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் இன்னொரு இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்து பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புலிகளின் மகளிர் படையினர் நிலைகொண்டிருந்த கிளாலி முன்னரங்க நிலைப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் -

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாயின் சடலம் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதாகவும் அதைக் கண்காணிப்புக் குழு ஊடாக படையினரிடம் கையளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவ அணி ஒன்று கிளாலி கடல்நீரேரி வழியாக இராணுவ சூனியப் பிரதேசத்தைக் கடந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்தபோதே இந்தத் தாக்குதல் (12 ஆம் பக்கம் பார்க்க)


நேற்று மாலை ஆயுதங்களுடன் ஊடுருவ முற்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் இன்னொரு இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்து பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டிருந்த... டிருந்த கிளாலி முன்னரங்க நிலைப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் -

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாயின் சடலம் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவ அணி ஒன்று கிளாலி கடல்நீரேரி வழியாக இராணுவ சூனியப் பிரதேசத்தைக் கடந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்த போதே இந்தத் தாக்குதல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை மலரச்செய்ய மக்களின் உந்துசக்தி அவசியம்!

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அரசியல் தலைவர்கள் முன்னின்று செயற்பட வேண்டும் என நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரி வித்தார்.

போர்நிறுத்த உடன்பாடுகைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானத்தை மலரச்செய்வதற்கு மக்களின் உந்துசக்தி மற்றும் அழுத்தங்கள் அவசியம். சமாதானத்தை விரும்பும் இலங்கையர்களின் ஒத்துழைப்பின்றி அரசியல் கட்சிகளின் தலைவர்களோ விடுதலைப் புலிகளோ இந்த இலக்கை அடையமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய சமாதான சபையின் சிவில் அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த வைபவத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் மதத் தலைவர்கள் சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொழும்பில் தங்கியுள்ள எரிக் சொல்ஹெய்ம் நேற்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு -கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்கட்டுமானப் பணிகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

மீள் கட்டுமானப் பணிகளுக்காக உத்தேசிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முகாமைத்துவ உதவியாளருக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமாம்!

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரச சேவையில் ஆறு பதவிகளை இரத்துச்செய்து ஏற்படுத்தப்பட்டுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில இணைந்து கொள்ளவிரும்பும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக ஒன்றிணைக்கப்பட்ட சேவைகளின் பணிப்பாளர் ஜயம்பதி ஹெட்டியாராட்சி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - அடுத்த மாதம்23ஆம் திகதிக்கிடையில் இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்ளும் அரச ஊழியர்களுக்கு அவர்களது சேவைத் தர அடிப்படையில் விசேட சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

எழுதுவினைஞர், (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வேட்பாளராக ராஜபக்ஷவை நியமியுங்கள்!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உள்ளூராட்சிசபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாள ராக அனுரா பண்டாரநாயக்கவை நியமிக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் பலர் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையிலேயே கடந்த திங்கட்கிழமை இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த விசேட கூட்டம் ஒன்றிலேயே (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# இழப்புக்களின் முழுவிபரம் கிடைக்காமையால் உதவிகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது

## கடற்றொழில் நீரியல்வள உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தம் காரணமாக யாழ்.மாவட்டத்தில் சுண்டிக்குளம் தொடக்கம் காரைநகர் வரையுள்ள அனைத்து கடலோரக் கிராமங்களும் முற்றாக அழிந்துள்ளன. மக்கள் தமது வாழ்விடங்கள், கடற்தொழில் உபகரணங்களை இழந்து நிர்க்கதியான நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் ஒவ்வொருவருக்கும் சம அளவில் படகு, இயந்திரம், மீன்பிடி வலைகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வை மேம்படுத்த முடியுமென யாழ்.செயலகத்தில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம் கூறினார்.

கடந்த 15ஆம் திகதி யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கடற்தொழிலாளர் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் பலகோடி ரூபா பெறுமதியான கடற்தொழில் உபகரணங்களை தந்துதவ ஆயத்தமாக உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட உபகரணங்கள் பற்றிய விபரங்களை எம்மிடம் கோரியுள்ளன. முழுவிபரங்களும் எமக்கு கிடைக்காதபடியால் கொடுத்துதவ முடியவில்லை. இதனால் உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். ஆகவே, சமாசங்கள், சங்கங்கள் தங்கள் பிரதேச கிராமத்தின் இழப்பீடுகளை தாமதமின்றி திரட்டித்தருதல் வேண்டும்.

இதன் மூலம் விரைவில் உதவிகளை அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறமுடியுமெனக் கூறினார்.

இந்தத் திட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ள முன்மொழிவுகள் பின்வருமாறு,

சுண்டிக்குளம் தொடக்கம் மணற்காடு வரையும், சேந்தாங்குளம் தொடக்கம் காரைநகர் வரையும் உட்கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கு போதியளவு அரச காணிகள் உள்ளதால், சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள், பொதுக்கிணறுகள், மீன் ஏல விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு 359 மில்லியன் ரூபாவுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

குருநகரில் படகு கட்டும் தொழிற்சாலை அமைத்தல், பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்து மேலும் ஐந்து படகு கட்டும் தொழிற்சாலைகள் அமைத்தல்.

சாந்த பீரிஸ் நிறுவனம் மணற்காடு கிராமத்தில் 40 வீடுகளை அமைத்து வருகிறது, இன்னமும் 175 வீடுகளை அமைத்துத்தர ஒப்புக்கொண்டுள்ளது.

கியூமெடிக்கா நிறுவனம் 1000 படகுகள் வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. முதற்கட்டமாக 14 படகுகளும் 2ஆம் கட்டமாக 20 படகுகளும் கிடைத்துள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்தின் தொழில முறைக்கு ஏற்ப பொருத்தமான படகுகளை வழங்குதல் வேண்டும்.

கடற்தொழில் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 10 படகுகளும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் வழங்கப்பட்ட 9 படகுகளையும் மணற்காடு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்குதல்.

சுனாமி கடல்அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் இனம் காணப்பட்ட வீடுகளைத் திருத்திக் கொடுத்தல்.

அக்ஸன் ஃபோம் (Action Faim) நிறுவனம் பாதிக்கப்பட்ட கடற் தொழிலாளர்களுக்கு 26 கட்டுமரங்களை வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சகல கடற் தொழிலாளர்களுக்கும் சம அளவில் கடற்தொழில் உபகரணங்களை வழங்குதல்.

படகு வெளியிணைப்பு இயந்திரம், வலைகள் தனித்தனியாகப் பெறவிரும்புவோருக்கு தனித்தனியாக முன்னுரிமைப்பட்டியல் தயாரித்தல்.

படகு கட்டும் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

மாமுனை கிராமத்துக்கு 60 படகுகளை வழங்க வெளிநாட்டு நிறுவனம் ஒன்று ஒப்புதல் வழங்கியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (21)

## விபத்தில் இளைஞர் படுகாயம்

(கோப்பாய்)

கோப்பாய்ச் சந்திக்கு சமீபமாக தண்ணீர் பவுசர் - லான்மாஸ்ரர் மோதிக் கொண்டதில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில், கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இ.ரங்கநாதன் (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார்.

## ஆன்மீக நிகழ்வு

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஆன்மீக நிகழ்வுத் தொடர் நாளை மாலை 6.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - கம்பன் காப்பியத்தில் சீதைக்கு விஞ்சிய பெருமை தேடித்தந்த சந்திப்பு, சீதை அனுமன் சந்திப்பா? சீதை இராவணன் சந்திப்பா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

## குருநகர் வீதிகளில் மின் விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியின் மிக முக்கியமான வீதிகளில் இலங்கை மின்சாரசபை மின் விளக்குகளைப் பொருத்தியுள்ளது.

இந்த வீதிகளில் மின் விளக்குகளை பொருத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து மின்சாரசபை மிக முக்கியமான பகுதிகளில் மின் விளக்குளை பொருத்தியுள்ளது. (206)

## பிரிவுபசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற மற்றும் பதவி உயர்வால் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நலன்புரிச் சங்கத் தலைவர் மு.பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தப் பிரிவுபசார நிகழ்வில் சுமார் 19 உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (44)

## அலங்கார உற்சவ பூர்த்திவிழா

(சங்கானை)

சங்கானை நிகரை அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவ பூர்த்திவிழா இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 8.00 மணிக்கு நவோத்திர சத சங்காபிஷேகமும் 109 விசேட ஆராதனைகளும் இடம்பெறும் நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (47)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூர் வாழ் தமிழர்களால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்று மாலை 4.30 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மாநாட்டு மண்டபத்தில் மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், நல்லூர் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள், பல்கலைக்கழக சிரேஷ்ட ஆலோசகர் புஸ்பரட்ணம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் சிவகரன், யாழ்.தமிழ் தகவல் தொழில் நுட்ப இணைப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

சிறப்பு விருந்தினர்களின் உரையைத் தொடர்ந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதி உதவிகள் வழங்கப்பட்டன.











சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஜேர்மன் அபிவிருத்தி அமைச்சர் விச்சோ றெக்சொயில் முதலாவது படத்திலும் அவர்களுடன் வந்திருந்த அந்த நாட்டுப் பிரஜைகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (29)

# ஓட்டுமடம் வீதியின் அவலம்

மானிப்பாய் வீதி - ஓட்டுமடம் சந்திப் பகுதியில் இரண்டு பாரிய குழிகள் காணப்படுகின்றன.

வீதியின் குறுக்கே செல்லும் வாய்க்கால், சந்தியின் இருபுறத்திலும் உடைந்து காணப்படுவதால் வாகனங்கள் செலவதற்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இது பற்றி அங்குள்ள சனசமூக நிலையமும், அப்பகுதி மக்களும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பல தடவைகள் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் அப்பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



# மோட்டார் சைக்கிள் மோதியதில் வீதியைக் கடந்த சிறுவன் காயம்

(சுன்னாகம்)

மயிலங்காட்டுப் பகுதியில் கடைக்குச் சென்றுகொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிள் மோதி சிறுவன் படுகாயடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவத்தில் முன்றரை வயதுடைய த.கசீந்தன் என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்றுக் காலை 9 மணியளவில் சிறுவன் தனது வீட்டிலிருந்து அருகில் உள்ள கடைக்குச் சென்றுகொண்டிருந்த வேளை அதே வீதியில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் சிறுவன் மீது மோதியதில் சிறுவன் படுகாயமடைந்ததாகத் தெரியவந்துள்ளது.

நிறைஞ்சனாஸ் சங்கானை
அப்பாஸ், சினேகா நடித்த
அது
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
பரத், சந்தியா மற்றும் பலர் நடித்த
காதல் சில தினங்களுக்கு மட்டும். கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
ஜெயா ஆஸ், பிரமதி, நாசர், விஜயகுமார், இளவரசி நடித்த
குருதேவா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விரைவில் எதிர்பாருங்கள். எமது அடுத்த வெளியீடு

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், நதிஷா, ரவிகிருஷ்ணா நடித்த
சுக்ரன்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

ராஜா யாழ்ப்பாணம்
மூன்றாவது வாரம்
அஜித் –திரிஷா, மணிவண்ணன், விஜயகுமார் நடித்த
ஜி
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

# போர்நிறுத்த காலத்தில் துன்ப சுமைகளே அதிகரிப்பு

## ஜேர்மன் அமைச்சரிடம் கூட்டமைப்பு எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும், இந்தப் போர் நிறுத்தத்தால் துன்பச் சுமைகளே அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜேர்மனியின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஹெய்டே மரிவிச் சொறெக் செயிலை கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது தெரிவித்தனர்.

அமைச்சருடனான இந்தச் சந்திப்பில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பு எம்.பிக்கள் அமைச்சருக்கு மேலும் தெரிவித்ததாவது-

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான எந்தவொரு செயற்பாட்டையும் தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளாத காரணத்தால் - தமிழ் மக்களும், தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் விரக்தியடைந்துள்ளனர். ஆனால், சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக அரசாங்கம் வாய்மொழிமூல உறுதிகளை வழங்கி வருகிறது.

சகஜ நிலை மீளத் திரும்பாததையிட்டு, தமிழ் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். அத்துடன், இந்த சமாதான காலத்தில் தென்பகுதி மக்கள் அனுபவித்துவரும் பலன்கள் எதனையும் தமிழ் மக்கள் அனுபவிக்கவில்லை.


சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்திக்குப் பொதுக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படுவது அவசியமானதாகும். ஆனால், இந்தக் கட்டமைப்பை உருவாக்குவதில் அரசாங்கம் காலதாமதம் காட்டி வருகிறது.

அரசாங்கம் சாதகமான முடிவுகளை எடுக்க முடியாமல் உள்ளமைக்கு, அதன் பிரதான கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி. எதிர்த்து வருகின்றமையே காரணமாகும்.

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பொலநறுவை, மட்டக்களப்பு வீதியில் இடம்பெற்ற தாக்குதல்களில், விடுதலைப் புலிப் போராளிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறான கொலைகள் - சமாதானப் பேச்சுவார்த்தையை முடிவுக்குக் கொண்டுவரச் செய்யலாம்.

எனவே, இவ்வாறான கொலைகள் இடம்பெறமாட்டாதென உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லெண்ண விஜயமாகக் கொழும்பு வந்த அமெரிக்கப் போர்க் கப்பலான புளூறிட்ஜ் இன் கட்டளைத் தளபதியான வைஸ் அட்மிரல் ஜொனாத்தனுக்கு இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நினைவுப் பரிசை வழங்குவதைப் படத்தில் காணலாம்.





தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார், ஜோசப் பரராஜசிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் - ஜேர்மன் அபிவிருத்தி அமைச்சர் ஹெய்டே மரிவிச் ஷெயினைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதைப் படங்களில் காணலாம்.

# இலங்கையிலுள்ள மக்களே பிரச்சினையை தீர்க்கவேண்டும்

## கொழும்பு நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர்

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக, அரசாங்க சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்பாடு மற்றும் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு, மூன்று வருடங்கள் நிறைவுபெற்றதை முன்னிட்டு, தேசிய சமாதானப் பேரவை ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டைத் தொடர வேண்டும் என்பதோடு, அது குறித்த திருப்தியையும் தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் ஊடாக பேச்சுக்கு வருவது என்பது இரு தரப்பினரதும் அடிப்படை. இரு தரப்பும் பலத்துடன் உரியவற்றை பேச்சுவார்த்தை மூலம் பெறறுக்கொள்ளுதலே இதன் அடிப்படை எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லங்ஸ்றீட் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை மக்கள் துவிச்சக்கர வண்டியில் இருக்கிறார்கள். அதற்குரிய விசையை வழங்குவதனூடாகவே அதனை ஓடச்செய்ய முடியும்.

நாம் சமாதான முயற்சிகளுக்கான சகல உதவிகளை வழங்க முடியுமாயினும், அந்த நாட்டு மக்களே தமது பிரச்சினைக்கு உரிய தீர்வு காணவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகளும், அரசும் கடைப்பிடித்த பொறுமைக்கு வாழ்த்துத் தெரிவித்த ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் அக்கியோ சூடா - நோர்வே அனுசரணைக்கும், கண்காணிப்புக் குழுவுக்கும் நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பும் முழுமையாக கிடைக்கும் என தெரிவித்த அவர் -

அனைத்துத் தரப்பினரும் சமாதானத்தை ஏற்படுத்த முனையவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர்கள், பேராசிரியர்கள் திஸ்ஸ விதாரண, அதாவுட செனவிரத்ன, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, சமாதானப் பேரவையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ரோக்கியோ நிதியுதவியில் ஒரு சதமும் கிடைக்கவில்லை

— நிதியமைச்சர் —

ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின்போது, சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்த நிதியுதவியில் ஒரு சதம்கூட நாட்டுக்குக் கிடைக்கவில்லை என்று - நிதி திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

பல நாடுகள் உதவிகள் வழங்குகின்றன. இந்த உதவிகளுக்கும், நிதி வழங்குவதற்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் உள்ளன.

ரோக்கியோ மாநாட்டின் மூலம் 45 ஆயிரம் கோடி ரூபா நாட்டுக்குக் கிடைக்குமென்று, பந்துல குணவர்த்தன கூறியது அண்டப புழுகாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

# இனப்பிரச்சினையை தீர்க்க அமிர்தானந்தமயி தயாராம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு - புலிகளுக்கு உதவத் தயார் என மாதா அமிர்தானந்தமயி விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் மாதா அமிர்தானந்தமயி - இலங்கைக்கு பயணம் மேற்கொண்டார். மூன்றுநாள் பயணத்தின்போது ஜனாதிபதி சந்திரிகாவை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார்.

இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு, கடைசியாக கேரள மாநிலம் - திருவானந்தபுரத்துக்குச் சென்றபோதே, விமான நிலையத்தில் நிருபர்களிடம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் சுனாமி பாதித்த பகுதிகளில் ஒன்றான அம்பாறையில் மக்களைச் சந்தித்தேன். அப்போது புலிகளும், இராணுவத்தினரும் வந்து சந்தித்தனர். அவர்கள் மனம் திறந்து பிரச்சினைகள் குறித்துப் பேசினர். இருதரப்பினரும் ஒற்றுமை யாகச் செயற்பட வேண்டும் என்ற தங் கள் உணர்வுகளை வெளிப்படுத்தி னர்.

வேறொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட நான் விரும்பவில்லை. ஆனால், இனப் பிரச்சினைக்கு உதவவேண்டும் என்று இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் கேட்டுக்கொண்டால் - அது பற்றி ஆலோசிப்பேன். இரு தரப்பினரும் விருப்பப்பட்டால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுவேன் என மாதா அமிர்தானந்தமயி கூறினார்.

இலங்கையில் சுனாமியால் பாதிப்புற்ற பகுதிகளை மறுசீரமைப்புப் பணிக்கு 3 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தேசிய பாடசாலைகளில்

# கனிஷ்ட வகுப்புக்களை நீக்குமாறு அரசுக்கு கல்வியாளர்கள் ஆலோசனை

(கொழும்பு)

பிரதான தேசிய பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்களை நீக்குமாறு கல்வியலாளர்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்க்கும்போது தோன்றும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையிலேயே, கல்வியியலாளர்கள் அரசிடம் இந்த ஆலோசனையை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறு நீக்கினால் எதுவித சிக்கல்களும் தோன்றாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத் தரங்களை இவ்வாறு நீக்கினால், பிரதான வரிசை தேசியப் பாடசாலைகளில் 6 ஆம் தரத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்றும் அவர்கள் குறிட்பிட்டுள்ளனர்.

இந்த ஆலோசனை முன்பு அரசிடம் முன்வைக்கப்பட்டபோது, பழைய மாணவர் சங்கங்களின் எதிர்ப்பின் காரணமாகச் செயற்படுத்த முடியாதுபோய்விட்டது என்றும், கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கல்வி அமைச்சின் ஆலோசனை சபைகளிலும் இந்த ஆலோசனை முன் வைக்கப்பட்டன என்றும், அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய வான் பாதுகாப்பு முறை அமுல்படுத்தப்படும்

## விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விமானங்கள் மூலம் புலிகள் நடத்தக்கூடிய தாக்குதல்களை முறியடிப்பதற்காக, நவீன ராடர் சாதனங்கள் மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை, இலங்கை விமானப் படை கொள்வனவு செய்யவிருப்பதாக விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

புலிகளிடம் புதியரக விமானங்கள் இருப்பதாக வெளியான தகவல்கள் குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

புலிகளின் விமானத் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில், முழு இலங்கையையும் உள்ளடக்கிய ஆகாயப் பாதுகாப்பு முறையை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலிகளிடம் உள்ள விமானங்களில் சி -4 ரக உயர் சக்தி பிளாஸ்ரிக் வெடிமருந்தை நிரப்பி, முன்னணி முக்கிய நிலைகளைத் தாக்கி அழிக்கும் சந்தர்ப்பங்கள் இருப்பதாக, வெளிநாட்டுப் பாதுகாப்பு நிபுணர்கள் - இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இத்தகைய தாக்குதல்களை முறியடிப்பதற்கு நவீன ராடர் சாதனங்கள், விமான எதிர்ப்பு ஏவுகணைத் தொகுதிகளை அளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முழு இலங்கையையும் உள்ளடக்கியதாக ஆகாயப் பாதுகாப்பு முறை அமுல்படுத்தப்படும். இதற்கு முன்னர் முழு இலங்கையும் உள்ளடங்கிய பாதுகாப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்றும், விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா மேலும் தெரிவித்தார்.

(தே)

# எந்த வீரர்கள் வந்தாலும் அவர்களை சமாளிப்போம்

## பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம்



பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அதிக நெருக்கடி இந்தியாவுக்குத் தான். எங்களுக்கு இல்லை. என்று பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் கூறியுள்ளார்.

இந்தியப் பயணம் குறித்து பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம் உல்-ஹக் கூறியதாவது -

இந்திய அணி கடந்த ஆண்டு பாகிஸ்தானில் பயணம்செய்து விளையாடியபோது டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது. இந்தத் தோல்வியை மனதிற்கொண்டு பழி வாங்கும் விதத்தில் தற்போதைய பயணத்தில் எங்கள் அணி ஆடும் என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

நாங்கள் பழிவாங்கும் விதத்தில் ஆடமாட்டோம். மாறாக வெற்றியைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம்.

டெண்டுல்கர் சிறந்த வீரர் ஆவார். அவர் அணியில் இடம்பெறும் பட்சத்தில் இந்திய அணி மேலும் வலுப்பெறும். டெண்டுல்கர் உட்பட யாராக இருந்தாலும் அவர்களை நாங்கள் சமாளிப்போம்.

யாரையும் எதையும் பற்றிக் கவலைப்படவேண்டியது இல்லை. எங்கள் அணியினர் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி ஆடுவர். எங்களுக்கு எந்தவிதமான நெருக்கடியும் இல்லை. நெருக்கடி எல்லாம் இந்திய அணிக்குத் தான். ஏனெனில், சொந்த மண்ணில் ரசிகர்களின் எதிர்பார்ப்புடன் ஆடுவதால் இந்தியாவுக்குத்தான் அதிக நெருக்கடி இருக்கும். போட்டியின் முடிவை அனுபவம் நிர்ணயிக்காது. பொறுப்பும் ஆர்வமும் தான் போட்டியை நிர்ணயிக்கும்.

அவுஸ்ரேலிய தொடரைவிட சிறப்பாக ஆடுவோம். ஏனெனில், அவுஸ்ரேலிய நிலைமை வேறு. இந்திய நிலைமை வேறு ஆகும். இந்தியாவின் தட்ப வெப்பநிலை மற்றும் சீதோஷன நிலை எங்களுக்குப் பொருத்தமாக இருக்கும்.

கங்கூலி சிறந்த கப்டன் மற்றும் துடுப்பாட்ட வீரர் ஆவார். சொஹைப் அக்தர் அணியில் இடம்பெறாதது பெரிய இழப்பு ஆகும். சிறந்த பந்து வீச்சாளராக அவர் அவுஸ்ரேலிய தொடரில் சிறப்பாகப் பந்து வீசினார்.

அக்தர் அணியில் இடம்பெற்றிருந்தால் இந்தியாவுக்கு அதிக நெருக்கடியைக் கொடுக்க முடிந்திருக்கும். எனினும், அவரது இடத்தை இளம் வீரர்கள் பூர்த்திசெய்வார்கள். அக்தர் உடல் தகுதி பெறாமல் அணியில் இடம்பெறாதது துரதிஷ்டமே.

டெண்டுல்கர், அக்தர் ஆகியோர் அணியில் இடம்பெற்றால் மேலும் சிறப்பாக இருக்கும். மாறாக அவர்கள் இடம்பெறாவிட்டாலும் குறை இருக்காது. இவ்வாறு இன்சமாம் கூறினார்.

## சதமடிக்க தயாராகிறார் பக்னர்

கிரிக்கெட் போட்டியின் போது வீரர்கள் சதம் அடித்து சாதனை படைப்பது அவ்வப்போது நடைபெற்றுவரும் விடயமாகும். ஆனால், தற்போது போட்டி நடுவர் ஒருவர் சதம் அடித்து சாதனை படைக்கத் தயார் நிலையில் உள்ளார்.

அதாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் எந்த ஒரு நடுவரும் இதுவரை 100 போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியது இல்லை. ஆனால், தற்போது நடுவர் ஸ்டீவ் பக்னர் அந்தச் சாதனையை படைக்க உள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி எதிர் வரும் 16 ஆம் திகதி முதல் 20 ஆம திகதி வரை கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் ஸ்டீவ் பக்னர் நடுவராகப் பணியாற்றவுள்ளார். இது அவருக்கு 100 ஆவது போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்டீவ் பக்னருக்கு அடுத்தாக அதிக பட்சமாக டேவிட் ஷெப்போர்ட் (86 போட்டி) வெங்கட ராகவன் (73 போட்டி) உள்ளனர்.

# சேவாக் போன்று எனக்கு ஆதரவு கிடைக்கவில்லை

## குமுறுகிறார் அப்ரிடி



(புதுடெல்கி)

விளாசல் ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதும் அணியின் கப்டன், பயிற்சியாளரின் ஆதரவு கிடைக்கவில்லை என பாகிஸ்தான் வீரர் அப்ரிடி ஆதங்கம் தெரி வித்துள்ளார்.

இந்தியாவின் சேவாக் மற்றும் எனது ஆட்டத்தில் நிறைய ஒற்றுமைகளைக் காணலாம். இருவருமே அடித்து ஆடவே ஆசைப்படுவோம். ஆனாலும், ஒரு சின்ன வித்தியாசம். சேவாக் மீது - கப்டன், பயிற்சியாளர் நிறைய நம்பிக்கை வைத்துள்ளனர். தேவையான ஆதரவளித்து ஊக்கப்படுத்துகின்றனர். எனக்கு கப்டன் இன்சமாம் மற்றும் பயிற்சியாளரின் ஆதரவு ஒரு போதும் கிடைப்பதில்லை. அணியின் ஆதரவு மட்டும் இருந்திருந்தால் இன்னும் சிறப்பான வீரராக முன்னேற்றம் கண்டிருப்பேன்.

தற்போதைய இந்தியத் தொடரிலும் எனது இயல்பான ஆட்டத்தையே வெளிப்படுத்த உள்ளேன் . 1999 இல் சென்னை டெஸ்டில் அடித்த 141 ஓட்டங்களை மறக்க முடியாது. இப்போட்டியில் சச்சின் சதம் அடித்தபோதும் எனது சதம் தான் அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தது.

இம்முறை அவுஸ்ரேலியாவின் கில்கிறிஸ்ட் வழியை பின்பற்றவுள்ளேன். இவரைப்போல கடைசிக் கட்டத்தில் களமிறங்கிச் சதம் அடிக்கத் திட்டமிட்டுள்ளேன். இந்திய ஆடுகளத்தில் பந்துகள் அதிகளவில் எழும்பாது. இதனால் தொடக்க வீரராக களமிறங்கும் ஆசையும் உண்டு.

ஆனாலும், கடந்த முறைபோல துடுப்பாட்டம் தேர்வு செய்யப்படவில்லை. இப்போது துடுப்பாட்டம் தெரிந்த பந்து வீச்சாளராக நான் தேர்வு செய்யப்பட்டுள்ளேன். எனவே, கடைசியில் களமிறக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அதிகளவில் பந்துவீச வேண்டியிருக்கும்.

இந்தியாவின் இர்பான் பதான் சிறப்பாகப் பந்து வீசுவார். இதற்கு நான் பதிலடி கொடுக்கவேண்டும் என பாகிஸ்தான் ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். பதானுக்கு ஒரு ஓவரில் 6 பந்துகள் உள்ளன. நானோ ஒரு பந்தில் தவறு செய்தாலும்கூட கதை முடிந்துவிடும். இதனை உணர்ந்து மிகுந்த கவனத்துடன் செயல்படுவேன்.

இந்தத் தொடரில் டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. இந்திய அணியில் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆடும் துடுப்பாட்டக்காரர்கள், 20 விக்கெட் வீழ்த்தும் திறமைமிக்க பந்து வீச்சாளர்கள் இருப்பது சாதகம். ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தானுக்கே வெற்றி வாய்ப்பு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விளையாட்டு

## சிம்பாப்வே வீரர் பிளிக்நெட் மீண்டும் அணிக்கு திரும்பினார்



(ஹராரே)

ஒரு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சிம்பாப்வே அணிக்குத் திரும்பியுள்ளார் அன்டி பிளிக்நெட்.

சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் கடந்த ஆண்டு பெரிய குழப்பம் ஏற்பட்டது. இன அடிப்படையில் வீரர்கள் தேர்வுக்கு எதிர்ப்புக் கிளம்ப கப்டன் ஹீத் ஸ்டீரிக் தலைமையில் 15 வெள்ளை இன வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டனர். அவர்களில் சகலதுறை ஆட்டக்காரர் அன்டி பிளிக்நெட்டும் ஒருவர்.

அணியில் இருந்து நீக்கப்பட்ட பிறகு அவுஸ்ரேலியாவில் கிளப் கிரிக்கெட் ஆடினார். அது சரிப்படவில்லை. வேறு வழியின்றி மீண்டும் சிம்பாப்வே அணிக்குத் திரும்பியுள்ளார் பிளிக்நெட். எந்த நிபந்தனையும் இன்றி மீண்டும் அணிக்குத் திரும்புகிறேன் என்று தெரிவித்தார்.

வீரர்கள் ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டுள்ளார். ஆனாலும், தற்போதைய தென்னாபிரிக்கத் தொடரில் பிளிக்நெட் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளதாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை தெரிவித்தது.

# நீதிமன்றத்தின் கையில் இந்திய-பாகிஸ்தான் தொடர்

(புதுடெல்கி)

கிரிக்கெட் நேரடி ஒளிபரப்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டால்தான் பாகிஸ்தான்- இந்திய மோதல் நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் சபை தலைவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர் வரும் 28 ஆம் திகதி முதல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இந்தப் போட்டிக்கான அட்டவணை விபரங்கள் அனைத்தும் அறிவிக்கப்பட்டுவிட்டன. முதல் டெஸ்ட் போட்டி மார்ச் 8 ஆம் திகதிமுதல் 12 ஆம் திகதிவரை மொகாலியில் நடக்கவுள்ளது.

இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகள் ஒருபக்கம் விறுவிறுப்பாக நடந்துவரும் வேளையில் போட்டி ரத்துச்செய்யப்படும் அபாயம் இருக்கிறது என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா, சண்டிகரில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறுகையில் -

இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி ஒளிபரப்பு செய்யப்படும் தொலைக்காட்சி பற்றிய விபரங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. தொலைக்காட்சி பற்றிய பிரச்சினை தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத பட்சத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் போட்டி ரத்துச்செய்யப்பட வாய்ப்பு உள்ளது. சர்வதேச கிரிக்கெட் விதிப்படி நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் போட்டிகள்தான் சர்வதேச அந்தஸ்து பெறும் எனும் நிலையுள்ளது. எனவே, இந்த விவகாரத்தில் நீதிமன்றம் விரைவில் முடிவு எடுக்கவேண்டும் என்றார்.

## ரெனிஸ் தரவரிசை முதலிடத்தில் டேவன்போர்ட்



மகளிர் ரெனிஸ் சங்கம் வெளியிட்ட உலக ரெனிஸ் வீராங்கனைகள் தரப்பட்டியலில் அமெரிக்காவின் லின்டசே டேவன்போர்ட் 4965 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியல் விபரம் -

டேவன் போர்ட் - (அமெரிக்கா) 4965, அமெலி மௌரெஸ்மோ (பிரான்ஸ்) - 4854, செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4389, மரியா ஷரபோவா (ரஷ்யா) - 4311, அனஸ்டாசியா மிஸ்கினா (ரஷ்யா) - 3856, ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா (ரஷ்யா) - 3745, எலினா டெமென்டிவா (ரஷ்யா) -3665, வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) - 2563, அலிசியா மோலிக் (ரஷ்யா) -2426, ஜெனிபர் கேப்ரியாட்டி (அமெரிக்கா) - 2359.

## டெண்டுல்கர் உடல்நிலை; பயிற்சியாளர் சந்தேகம்!



(புதுடெல்கி)

இந்திய அணியின் புதிய உடற் பயிற்சி நிபுணர் ஜான்குளோஸ்கர் - டெண்டுல்கரின் உடல்தகுதி குறித்து சந்தேகம் எழுப்பியுள்ளார். அவர் முழு உடல் தகுதியுடன் இல்லை என்றும் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

டெண்டுல்கர் உடல் தகுதியில் மெதுவாக முன்னேற்றம் அடைந்து வருகிறார். இதனால் இப்போதுள்ள சூழ்நிலையில் எதுவும் கூற இயலாது. துலீப் டிராபி போட்டி முடிவில் அவர் உடல் தகுதி தெரியவரும்.

காயமடைந்த இர்பான் பதான், பாலாஜி குணமடைந்துவிட்டனர். பயிற்சியின் போது பதான் சிறப்பாக பந்து வீசினார். அவரது உடல் நிலை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

டெண்டுல்கர் தெற்கு மண்டலத்துக்கு எதிரான துலீப் டிராபி போட்டியில் ஆடி வருகிறார். இந்தப் போட்டி முடிந்த பிறகே அவரது உடல் தகுதி குறித்து அறிவிக்கப்பட்டு பாகிஸ்தான் தொடரில் ஆடுவாரா? என்பது தெரிய வரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வக்கார் பயிற்சியளிக்க தயாராம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யுனூஸ், இந்தியாவுக்குச் செல்லவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குப் பந்துவீச்சு பயிற்சியளிக்க தயாராக உள்ளதாகக் கூறியுள்ளார். இது குறித்து அந்த நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார் கானிடம் வக்கார் யுனூஸ் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# பெண்கள் பலதுறைகளில் மேம்பட்டாலும் விகிதாசார முறையில் போதுமானதல்ல!

## முன்னாள் அதிபர் செல்வி செல்லையா

(உடுவில்)

என்னால் முடியும் என்ற தன் நம்பிக்கையுடன் பெண்கள் எக்காரியத்தைச் செய்தாலும் அதில் வெற்றி நிச்சயம் கிடைக்கும். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் இருப்பது உண்மை. தோமஸ் அல்வா எடிசன், கலிலியோ போன்ற விஞ்ஞானிகளின் வெற்றிக்கு பெண்களே காரணமாக அமைந்தார்கள்.

உலகில் இன்று முன்னணி வகிக்கும் ஜப்பானில் உள்ள பெண்கள் சகல தொழில்களையும் செய்யக்கூடிய வல்லுநர்களாக உள்ளனர். அவர்களைப் போல நாமும் நாளாந்தம் என்னென்ன புதுமைகளை செய்து, எமது பொருளாதார வளத்தைப் பெருக்கலாம் என சிந்திக்கவேண்டும் என உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் செல்வி செல்லையா தெரிவித்தார்.

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் பால், பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான செயற்குழுவால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட திறன்வெளிக்கொணர் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையத்தின் திட்ட இணைப்பாளர் ரீ.கண்ணனின் நெறிப்படுத்தலின்கீழ் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பரிசளிப்பு வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

காலங்காலமாக பெண்கள் ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் சில காரியங்களை செய்யக்கூடாது எனவும், சிலவேலைகளுக்கு ஆண்கள்தான் பொருத்தம் என்ற சில மரபுகளின் இறுக்கம் காரணமாகவும் பெண்களின் திறமைகள் மழுங்கடிக்கப்பட்டன.

ஆனால் இன்று அந்த நிலை மாறி பெண்கள் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, விமானிகளாகப் பணியாற்றுகிறார்கள். இருந்தபோதும், இது விகிதாசார முறையில் போதுமானதாக இல்லை.

மேசன் வேலை, தச்சுவேலை, ஓட்டோ, சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் மெக்கானிக் வேலை போன்றவற்றையும் பெண்கள் செய்ய முன்வரவேண்டும். இதன் மூலம் எங்களை நாமே ஆயத்தம் செய்து பெண்களுக்கெதிரான வன்முறைகளை உடைத்தெறியலாம் எனக் கூறினார்.

யு.என்.எச்.சி.ஆர். வதிவிடப் பிரதிநிதி ஷெறின் மில்ரன் இங்கு உரை நிகழ்த்தும்போது - அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அமைப்புகள், ஐ.நா திட்டப் பிரிவு என்பன தனித்தனியாக இயங்கிய காலத் தில் பெண்களுக்கெதிரான வன் முறைகளைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்கமுடியாது இருந்தது. இதனால் 2003 ஆம் ஆண்டில் இவற்றை ஒருங்கிணைத்து, யு.என்.எச்.சி.ஆர் அமைப்புடன் செயற்படுத்தி வருகிறோம். இதில் மருத்துவம், சட்டம், பாதுகாப்பு, பொருளா தாரம் சார்ந்த சகல தரப்பினருடன் ஆண், பெண் இருபாலாரையும் இணைத்து செயற்படுத்தி வருகிறோம்.

இதனால் சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு விரைவாக உரிய தீர்வு காணமுடியும் என்றும், இந்த அமைப்பில் மனிதாபிமானமுடைய எவரும் இணைந்துகொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (101)

# கலைக்குழுவில் இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சைத் திகதிகள்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பிரிவின் கலைக்குழுவில் பற்குபற்ற விண்ணப்பித்துள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணிக்கு 224, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரியில் அமைந்துள்ள திரைப்படக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பிரிவு காரியாலயத்திலும், மார்ச் மாதம் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய நடனம், சண்டை, இசை (பாடல்-வாத்திய) கலைஞர்கள் நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடங்களில், குறித்த தினங்களில் தமது பெயரைப் பதிவுசெய்து, நேர்முகப் பரீட்சைக்கு நேரடியாகத் தோற்றலாம் என தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனத்தின் பணிப்பாளர் சு.தேவதாசன் தெரிவித்தார்.

# வான் அகழும் கனரக வாகனம் படையினரால் தடுத்து வைப்பு!

சக்கோட்டையில் மீனவர்கள் இறங்குதுறை அமைப்பதற்கென சேவாலங்கா நிறுவனத்தால் கொண்டுவரப்பட்ட கனரக வாகனம், படையினரால் பறிக்கப்பட்டு தடுத்துவைககப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் சேவாலங்கா நிறுவனத்தால் முருகைக்கல் அகற்றுவதற்கென வவுனியாவிலிருந்து கனரக வாகனம் எடுத்துவரப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை சக்கோட்டை பகுதியில் வான் அகழ்வதற்காக நிறுத்தப்பட்டிருந்தவேளை, அந்தப் பகுதிக்கு வந்திருந்த படையினர் கனரக வாகனத்தை எடுத்துச்சென்று, முகாமில் தடுத்துவைத்துள்ளனர்.

சுனாமி கடற்கொந்தளிப்பால் சேதமடைந்த இறங்குதுறையை புனரமைப்பதற்கு படையினர் தடுத்து வருவது குறித்தும், வான் அகழ்வதற்கென கொண்டுவரப்பட்ட கனரக வாகனம் தடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், யாழ்.மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது. (14,12)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சமூக முன்னேற்றக் கழகம் உதவி!

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு மருந்துவகை மற்றும் நிதி ஆகிய உதவிகளைச் செய்வதற்கு 12 லட்சம் ரூபாவை சமூக முன்னேற்றக்கழகம் வழங்கியுள்ளது.

அத்துடன் வடமராட்சி, வன்னி, திருமலை, மட்டக்களப்பு பகுதிகளுக்கு இந்த நிறுவனம் நிதியுதவிகளையும், மருந்து வகைகளையும் வழங்கிவருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஊடாக 5 லட்சம் ரூபா மருந்து வகைகளையும், செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்ட கிளை ஊடாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா மருந்துப் பொருட்களையும் இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

இதேவேளை - திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு மேலும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப்பொருட்களையும் சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம் வழங்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சமாசத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு நிதி வழங்க 2 லட்சம் ரூபாவையும், உயிரிழந்த குடும்பங்களுக்கு 2 லட்சம் ரூபாவையும் வழங்கிவருவதாகவும் தெரியவருகிறது.

கடந்த 15 ஆம் திகதி மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களுக்கு விஜயம் செய்த சமாசத்தின் செயற்குழுவினர் மருந்துப் பொருட்களை எடுத்துச்சென்று, நேரில் வழங்கியதாக சமாசத்தின் பொதுச்செயலாளர் ஜே.காணிக்கைநாதன் தெரிவித்தார். (206)

# முள்ளானை சனசமூக நிலையத்தை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

(மானிப்பாய்)

யுத்தத்தால் முற்றாக அழிவடைந்த இளவாலை - முள்ளானை கலைவாணி சனசமூக நிலையத்தைப் புனரமைத்துத் தருமாறு, யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் முன்னாள் சமாசத் தலைவர் வை.செகராஜசிங்கம், மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் பி. விக்டர் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் - கலைவாணி சனசமூக நிலையம் கடந்த பல வருடங்களாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடுகள் எதுவுமின்றி புனரமைக்கப் படாத நிலையில் உள்ளது.

எனவே தாங்கள் எமது பகுதி மக்களின் அவசிய தேவையைக் கருத்திற்கொண்டு இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து மூன்று லட்சம் ரூபா நிதியை ஒதுக்கித் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (100)

# உடுப்பிட்டி வடக்கு செயற்குழு கூட்டத்தில் வெங்காயத்துக்கான விலை நிர்ணயம்!

(மானிப்பாய்)

வெங்காயத்தின் அறுவடைக் காலம் ஆரம்பித்துள்ள இந்த வேளையில் - உடுப்பிட்டி வடக்கு பிரதேச செயற்குழுக் கூட்டத்தில் வெங்காயத்தின் நிர்ணய விலை சம்பந்தமாக ஆராயப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக செயற்குழுவின் செயலாளர் எஸ். பிரசாத் தெரிவித்தார்.

தற்போது நிலக் குத்தகை, தொழிலாளர் கூலி, செயற்கை - இயற்கை உரங்களின் விலை, பசளை, கிருமிநாசினி ஆகியவற்றின் விலை, எரிபொருட்களின் விலை போன்ற உற்பத்திச் செலவுகள் பல மடங்கு அதிகரித்துக் காணப்படும் நிலையில் வெங்காயத்தின் விலை மிகக்குறைவாகவே காணப்படுகிறது.

இதனால் விவசாயிகள் பெரியளவில் நஷ்டமடைவதுடன், மன விரக்தியும் அடைகின்றனர். 3 பரப்புக் காணியில் விளையக்கூடிய வெங்காயத்தின் அதிகூடிய விளைச்சல் 25 அந்தராகும்.

ஆனால், தற்போது சாதாரணமாக 15 - 20 அந்தர் வரையான வெங்காயமே கிடைக்கிறது. 3 பரப்புக்காணியில் உற்பத்திக்கான மொத்தச் செலவு 48 ஆயிரத்து 850 ரூபாவாகும்.

எனவே வெங்காயத்தின் அதிக விளைச்சலைக் கருத்திற்கொண்டு, ஒரு அந்தர் வெங்காயத்தின் ஆகக் குறைந்த ஆரம்ப விலை 2 ஆயிரம் ரூபாவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதன்மூலம் விவசாயிகள் 3 பரப்புக் காணியில் அதிக விளைச்சல் பெற்றால், ஆயிரத்து 150 ரூபா மட்டுமே அவர்களால் இலாபமாகப் பெறமுடியும்.

ஒரு அந்தர் வெங்காயத்தின் ஆகக்குறைந்த ஆரம்ப விலை 2 ஆயிரம் ரூபாவாகவும், ஒரு மாதத்தின் பின்னர் வெங்காயத்தின் நிறைகுறைவைக் கருத்திற்கொண்டு, 200 ரூபா வீதம் மாதாமாதம் இந்த விலை அதிகரித்துச்செல்லும் என்றும் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தத் தீர்மானத்தை கருத்திற்கொண்டு, யாழ்.மாவட்டத்தில் வெங்காயம் பயிரிடும் மற்றும் விற்பனை செய்யும் வியாபாரிகள் ஏற்றுச் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளது. (100)

# உள்ளக கணக்காய்வாளர் தெரிவுக்கான போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அதிகாரசபையில் நிலவும் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை, எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு - 10 இல் உள்ள ஆனந்த மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (44,12)



கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் புதிய மாணவர்களை, தரம் இரண்டு மாணவர்கள் வரவேற்கும் காட்சியையும், நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி பே.பாலேந்திரன், அதிபர் எஸ்.வாமதேவன் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (82)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தாயகம் திரும்பியோருக்கு இரத்த பரிசோதனை

(சண்டிலிப்பாய்)

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பி, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியேறியோருக்கு மலேரியா தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதுடன், இரத்தப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்தப் பகுதி பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக இவர்களது விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (91)

## லைசென்ஸ் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்றைய தினம் நடைபெறமாட்டாது என்பதையும் - இவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 07.03. 2005 திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும் எனவும், மோட்டார் போக்குவரத்து திணைக்கள பதில் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சு.சுலக்ஷிகன்
முகவரி : அரியாலை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




# சூரியகாந்தி எண்ணெய்

## இறக்குமதிக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தியை மேற்கொள்ள முடியும்.





அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் தமக்குரிய நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்து வருகின்றன. இந்த நாடுகள் உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாதவற்றை இறக்குமதி செய்வதில் தவறில்லை. ஆனால், மூலப்பொருள், தொழிலாளர் வசதி போன்ற இன்னோரன்ன வசதிகள் இருந்தும், அந்தப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் பழக் கப்பட்டுவிட்டன. இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடொன்று இன்னும் அபிவிருத்தி அடையாததற்கான முக்கிய காரணமாகும்.

மக்களின் உணவில் எண்ணெய் பாவனை வழமையானது. உணவு தயாரிப்பதற்கு உபயோகிக்கும் சில வகையான எண்ணெய் வகைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். இவ்வாறு இறக்குமதி செய்யும் எண்ணெய் வகைகள் மிக நல்ல தரத்தைக் கொண்டவை என இறக்குமதியாளர்கள் கூறுகிறார்கள்.

தேங்காய் எண்ணெயில் கொலஸ்ரோல் இருப்பதாகவும், உடல் உழைப்பில் அதிகம் ஈடுபடாதவர்கள் இதனால் பாதிப்படையக் கூடும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய் வகைகளில் கொலஸ்ரோல் இல்லை என விளம்பரப் படுத்தப்படுகிறது. மக்களும் இதை நம்புகின்றனர். ஆனால் இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் எண்ணெய் வகைகளில் - பாம் ஒயில் கலந்திருப்பதை அறியமாட்டார்கள். இதனால் இந்த வகையான எண்ணெய் பாவனையே மனித உடலை அதிகம் பாதிக்கிறது.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளாத பல காணிகள் இருக்கின்றன. இவற்றைத் தெரிவு செய்து, பயிர்களை வளர்ப்பதன் மூலம் எண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்குப் பொருத்தமான செடியாக சூரியகாந்திச் செடியைக் குறிப்பிடலாம்.

இறக்குமதி செய்யப்படும் சூரிய காந்தி எண்ணெய்க்குப் பதிலாக இந்தச் செடியைப் பயிரிட்டு, மக்களின் தேவைக்கான எண்ணெயைப் பெறமுடியும். இதற்கு விவசாயிகளின் ஒத்துழைப்புத் தேவை.

ஒரு தொன் சூரியகாந்தி விதைகளின் தற்போதைய விலை 25 ஆயிரம் ஆகும். ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்டிருக்கும் சூரிய காந்திச் செடியிலிருந்து, கிட்டத்தட்ட 2 தொன் விதைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விதைத்து 3 மாத கால கட்டத்தில் சூரிய காந்திப் பயிரின் விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும். இதைப் பயிரிடும்போது, கிருமி நாசினிகளையோ அல்லது களை நாசினிகளையோ உபயோகிக்கத் தேவையில்லை. இதற்குக் கால் நடை களின் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இதற்குத் தேவையான முக்கியமான விடயம் சூரிய ஒளியாகும். நீரும் அதிகளவில் தேவைப்படுவதில்லை. சூரிய காந்திப் பூக்களைப் பறித்துக்கொண்ட பின்னர், செடியைப் பயிர்செய்யும் நிலத்தில் புதைத்துவிட வேண்டும். இவ்வாறு செய்வதால், அடுத்த தடவை பயிர்ச் செய்கை மேற்கொள்ளும்போது, உரம் வழங்கத் தேவையில்லை. இதுவே உரமாகும்.

சூரிய காந்தி வகைகளில், கிட்டத்தட்ட 500 வகைகள் உள்ளன. இங்கு பயிரிடக்கூடிய சூரியகாந்தி வகைகளில் RK 49 என்ற வகையைக் குறிப்பிடலாம். இந்தவகைச் செடியின் உயரம் 4 அடி ஆகும். இதனால், காற்றைத் தாங்கக் கூடிய தன்மை இதற்கு உண்டு.

ஆனால் சூரியகாந்திச் செடி – 6, 7 அடி உயரமாக இருப்பதால், அவற்றால் காற்றைத் தாங்கக்கூடிய சக்தி இருப்பதில்லை. அவ்வாறான செடிகளைப் பயிரிடும்போது, அதைத் தாங்குவதற்குத் தடி ஒன்றை நட்டு, கயிற்றால் கட்டிவிட வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் ஆயிரக் கணக்கான செடிகளைப் பயிரிடுவதால், அவை அனைத்தையும் தாங்கி நிற்கக் கூடியவாறு தனித்தனியாக தடிகளை நட்டு கயிற்றால் கட்ட முடியாது. இது சிரமமான காரியம். அதனால், RK 49 வகையை நடுவதே சிறந்ததாகும்.

இந்த வகையைத் தேர்தெடுப்பதற்கான இன்னொரு முக்கிய காரணம் – இதில் அடங்கியுள்ள எண்ணெயின் அளவும் அதிகமாகும். இந்த வகை விதைகளில் 48 வீதம் எண்ணெய் உள்ளது. ஏனைய வகைகளில் 28 வீதம் அளவு எண்ணெயே அடங்கியுள்ளது.

தற்பொழுது ஒரு போத்தல் சூரிய காந்தி எண்ணெயின் விலை ரூபா 225 ரூபா. இங்கு இந்த எண்ணெய் பெறும் போது, விலை குறைவடையும். மேலும் சூரிய காந்திப் பயிரைப் பயிரிடுவதன் மூலம், வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும். சூரிய காந்தி விதைகளில் உணவு தயாரிக்கப்படுவதால், அதற்கும் சந்தை வாய்ப்புள்ளது.

சசி சந்திரகாசன்

# பசுவிடமிருந்து முழுப்பயன்பெற அதன் உணவிலும் அக்கறை தேவை



கால்நடைகளை வளர்க்கும் போது, அவற்றுக்குத் தேவையான போசாக்குச் சத்து அடங்கிய உணவுகளை வழங்க வேண்டும். அதிலும் குறிப்பாக– உணவுகளை எமக்கு வழங்கும் மிருகங்களின் வளர்ச்சிக்கு கல்சியம் அவசியம். இதனால் கால்நடைகளின் உணவோடு கல்சியம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

பாலுக்காக, பசுமாடுகளை வளர்ப்பவர்கள், பசுப்பாலில் உள்ள கொழுப்புச் சத்தை அதிகரித்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். நார்த் தன்மையுடைய உணவுகளே பால் தரும் பசுவுக்கு உகந்த உணவாகும்.

மேலும் யூரியா மொலாஷஸ் என்ற கனிப்பொருள் கட்டியொன்றை மாட்டுப் பட்டிக்குள் வைப்பதன்மூலம், பசுவுக்குத் தேவையான கனிப்பொருட்களை வழங்கலாம். இந்தக் கட்டியைப் பசு உண்ணும்போது, அதற்குத் தேவையான கனிப்பொருட்கள் கிடைக்கும்.

### யூரியா மொலாஷஸ் தயாரிக்கும் முறை

யூரியா மொலாஷஸ் தயாரிப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள் வருமாறு –

- ☆ இரண்டு பாத்திரங்கள்.
- ☆ ஒரு சவல்
- ☆ ஒரு பலகையால் செய்யப்பட்ட சட்டம் போன்றவை தேவைப்படும்.

இவற்றைப் பெற்றுக்கொண்ட பின்னர், கீழ் காணும் பொருட்களை உரிய அளவுகளின்படி சேகரிக்க வேண்டும்.

- ☆ மொலாஷஸ் – 40 வீதம்
- ☆ யூரியா – 8 வீதம்
- ☆ சிமெந்து – 9 வீதம்
- ☆ உப்பு – 5 வீதம்
- ☆ அரிசித் தவிடு – 37.5 வீதம்
- ☆ உலர் கல்சியம் சல்பேட் –0.3 வீதம்
- ☆ அணுமாத்திரை வாயுக்கள் – 0.2 வீதம்.

இந்தப் பொருட்களைப் பாத்திரம் ஒன்றில் இட்டு, சவலை உபயோகித்து நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். நன்றாகக் கலந்து கொண்ட பின்னர், இந்தக் கலவையை மரச் சட்டத்தினுள் போட்டு, ஒரு கட்டியைப் போல் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

35 – 400 கிலோ கிராம் இடையிலான, நிறையுடைய பசுவொன்றுக்கு, 5 கிலோ கிராம் நிறையுள்ள யூரியா மொலாஷஸ் கட்டி ஒன்று 7 – 10 நாட்களுக்குப் போதுமானதாகும். இந்தக் கட்டியை வழங்குவதால் – புரதம், கனிப்பொருள், சக்தி போன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது.

அத்துடன் பசுமாடுகளுக்கு மிகவும் உகந்த உணவு புற்களாகும். நகர்ப்புறங்களில் மாடு வளப்பவர்கள் உடனுக்குடன் புல் வழங்குவது சிரமமாகும். அதனால் புற்கள் அதிகமாகக் கிடைக்கும் காலப்பகுதியில், அவற்றைப் பாதுகாத்துப் பின்னர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

புற்களை வெட்டிக் காயவைப்பது பாதுகாப்பான விடயமாகும். உரிய காலத்தில் புற்களை வெட்டிக் கொள்ள வேண்டும். இதில் அவதானம் தேவை. ஏனெனில், பூக்கள் பூப்பதற்கு முன்னர், புற்களை வெட்டிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் இவற்றின் போஷாக்கும், சுவையும் அழிந்து போகாமல் பாதுகாக்கப்படும்.

வெட்டிக் கொண்ட புற்களில் வேண்டாதவற்றை நீக்கிவிட்டு, வெயிலில் காய வைத்து எடுக்க வேண்டும். பச்சை நிறமாக இருக்கும் போதே ஒரு நிழல் உள்ள இடத்தில் களஞ்சியப்படுத்தி, தேவைக்கேற்றபடி அடிக்கடி பிரயோசனப்படுத்திக் கொள்ளலாம்.

பசுவுக்கு வைக்கோலும் நல்லதொரு உணவாகும். ஆனால் வைக்கோலை உணவாக கால்நடைகள் உண்ணும்போது, அவை சமிபாடடையும் தன்மை குறைவாக உள்ளது.

இதனால் வைக்கோலை, அப்படியே கால்நடைகளுக்கு உணவாகக் கொடுக்கலாம். உரிய கனிப்பொருட்களை கரைசலில் ஊறவைத்துப் பின்னர் உணவாக வழங்கலாம்.

இதன் மூலம் வைக்கோல் உடனடியாக சமிபாடடையும். பின்வரும் இருமுறைகளில் வைக்கோலை ஊற வைக்கமுடியும்.

**முறை – 1**

15 – 30 கிராம் நிறையுடைய சோடியம் ஹைட்ரொக்சைட்டை ஒரு லீற்றர் நீரில் கரைக்க வேண்டும். அந்தக் கரைசலில் வைக்கோலை ஊறவிட்டு, பின்பு உணவாகப் பசுவுக்கு வழங்கலாம்.

**முறை – 2**

2 வீதம் – 4 வீதம் யூரியா கரைசலில் வைக்கோலை ஊறவிட்டுப் பசுவுக்கு உணவாக வழங்கலாம். ☆☆☆☆☆☆


## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 60/= | 60/= | 70/= | 60/= | 40/= | 60/= | 50/= |
| வெண்டிக்காய் | 20/= | 20/= | 30/= | 30/= | 20/= | 40/= | 45/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 55/= | 50/= | 55/= | 60/= | 60/= | 60/= | 65/= | 70/= |
| கத்தரிக்காய் | 80/= | 70/= | 80/= | 100/= | 80/= | 80/= | 80/= | 60/= |
| பாகற்காய் | 40/= | 50/= | 60/= | 60/= | 60/= | 60/= | 50/= | 40/= |
| கரட் | 50/= | 50/= | 35/= | 60/= | 50/= | 60/= | 75/= | 80/= |
| பீற்றூட் | 30/= | 25/= | 30/= | 40/= | 30/= | 60/= | 40/= | 60/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | - | - | 200/= |
| வெங்காயம் | 30/= | 20/= | 20/= | 20/= | 20/= | 25/= | 40/= | 35/= |
| பச்சை மிளகாய் | 45/= | 30/= | 40/= | 60/= | 50/= | 60/= | 60/= | 45/= |

## தொழில்மலர்

# பட்டமும், பயிற்சியும் பணியமர்வுகளை தீர்மானிக்கின்றனவா?

இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற போதிலும், நீண்டகால உள்நாட் டுப் போரால் உள்ளக இன முரண்பாடுகளால் தன் அபிவிருத்தி இலக்கில்



தடம் பதிக்க முடியாது தடுமாறிப் போயுள்ளது. இதற்கு இங்கு காணப்படும் பொருத்தமற்ற கல்விக்கோட்பாடுகளும் ஒரு காரணமாகும்.

அதாவது - குடியேற்ற நாடுகள் இலங்கையை ஆக்கிரமித்து, இலங்கையிலுள்ள வளங்களைத் தமக்கு சார்பாக சுரண்டிக் கொண்டதுபோல் கல்விக் கொள்கையையும் தமது பொருளாதார நலனுக்கு ஏற்ற வகையில் வடிவமைத்துப் புகுத்திக் கொண்டன. இதன் அடிப்படைக் கட்டமைப்பே இன்றும் இலங்கைக் கல்வி முறையில் காணப்படுவது. இரு ஒரு பெரும் குறைபாடாகவுள்ளது.

இதன் விளைவே இன்று இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பெருமளவான பட்டதாரிகள், தமக்குப் பொருத்தமான வேலை வாய்ப்புகள் கிடைக்காது அலைவதோடு, சமூகச் சீரழிவில் ஈடுபடவும் வழி வகுத்தது.

குறைவிருத்தி நாடுகள் பெரும்பாலானவற்றில் காணப்படுவது போன்றே, இலங்கையிலும் வறு மை, இடப்பெயர்வு, தொற்று நோய், பசி பட்டினி என்பன தலைதூக்கித் தாண்டவமாடுவதோடு, அரசியல் வியூகங்களும் அவ்வாறே அமைந்துள்ளன.

இதன் ஒரு வெளிப்பாடாகவே இளைஞர்களின் வுாக்கு வங்கியைக் கவரும் நோக்கோடு, சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு அரச நியமனம் என்ற கோட்பாட்டு அடிப்படையில் பட்டதாரிப் பயிற்சி செயற்திட்டம் அதாவது **(Graduate Training Programme)** ஒன்று செயற்படுத்தப்படுகிறது.

இதில் 1ஆம் கட்டம், 2ஆம் கட்டம் என இரு கட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. 3 ஆம் கட்டம் இன்னும் உள்வாங்கப்படவில்லை. இது தொடர்ந்து 4ஆம்..., 5ஆம்... கட்டம் என தொடரவே வாய்ப்புள்ளது. ஏனெனில் தொடராக பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் உட்புகுவதும், வெளியேறுவதும் இயல்பே.

இங்கு **GTP** திட்டத்தின் அடிப்படையில் முதல் இரு கட்டங் களும் 31.12.2004 அன்று தமது பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றன. இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பயிற்சிக்காலம் அண்ணளவாக மூன்று மாதங்களாகும்.

இந்தப் பயிற்சித்திட்டத்துக்கென தேசிய கல்வி நிறுவகத்தால் (NIE) வடிவமைக்கப்பட்ட பாட விதானங்கள் மிகவும் தகுதிவாய்ந்தவை ஆகும். அவையாவன -

1. **EST-Establishment**
2. **FR- Financial regulations**
3. **PP - Project planning**
4. **IT - Information technology**
5. **EL - English language**
6. **CPR - Communication and public relation**
7. **EP - Economic policies**
8. **CSL - Constitution of Srilanka**
9. **HVE - Human values and education**
10. **RR - Relief and rehabilitation.**

என பத்துப் பாடங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றில் இன்றைய காலத் தேவைக்கு ஏற்ப **EL (English language), IT (Information technology)** ஆகிய இரு பாட நெறிகளுக்கும் அதிக மணித்தியாலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய பாடநெறிகளைக் கற்கும் ஒரு பட்டதாரி, அதன் முழுப் பயனையும் நுகர்ந்து வெளியேறினால் அது சிறந்ததொரு வெளியீட்டைக் கொடுக்கும். இந்தத் திட்டம் - எடுகோள் ரீதியாக சிறப்பாகக் காணப்பட்ட போதும், நடைமுறை ரீதியாக சிறந்த வெளியீட்டைக் கொடுக்கவில்லை என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். இதற்குக் காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பொருத்தமான சிறந்த தகுதி வாய்ந்த வளஆளணியை குறுகிய காலத்தில் பெறமுடியாது போனமை, இதனால் செல்வாக்குப் பிரயோகங்கள் முன்னின்றமை.

2. நிர்வாகச் செயற்பாடுகளில் காணப்பட்ட போட்டித் தன்மை, இடர்பாடுகள், சிறந்த முகாமை இன்மை என்பன மாணவர்களது கல்விச் செயற்பாடுகளை தாமதித்தமை அல்லது பாதித்தமை.

3. மாணவர்களைவிருப்புத் தொழில் வாரியாகப் பிரித்து, அவர்களது துறைத் தொழில் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தாமையையும், பயிற்சிக்காலம் குறுகியதாக இருந்தமையும் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இதன் காரணமாக மாணவர்கள் அதிகளவு சகிப்புத் தன்மையை கொண்டிருக்க வேண்டிய கட்டாய நிலைக்கு ஆட்பட்டனர். மேலும் விடுமுறை இன்மையும் இவர்களை உளரீதியான ஒரு அமுக்க நிலையில் வைத்தே பயிற்சியை கட்டாயத் திணிப்பாக உள்வாங்க வேண்டியிருந்தது.

அதாவது - இங்கு கொடுக்கப்பட்ட பயிற்சிகள் அனைத்தும் ஒரு நிர்வாகத்துறையை தேர்ந்தெடுப்பவர்களுக்கே பொருத்தமானதாக அமைந்துள்ளது. ஆனால் ஆசிரிய நியமனத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு இது விருப்புக்குறைவான ஒரு போதனையாகவே இருந்துள்ளது. அதாவது - நுண்கலைப் பட்டதாரி (BFA) ஒருவர் தான் ஆசிரிய (சங்கீதம், பண்ணிசை, நடனம், நாடகம், சித்திரமும் வடிவமைப்பும்) நியமனத்தையே விரும்புவதால், அவர் ஆசிரிய வாண்மைசார் விருத்திக் கல்வியையே விரும்புகின்றார். எனவே அரசு பயிற்சியின் போது எல்லாப்பட்டதாரிகளையும் ஒரே மாதிரி, கையாண்ட மாதிரி, வேலைவாய்ப்பிலும் கையாழுமாயின் அது பயிற்சியால் பெற்ற அரைவாசி அனுகூலத்தையும் இழக்க வைத்து விட்டதாகவே முடிந்துவிடும்.

இதனால் பட்டதாரிகளை துறை ரீதியாகவும், தகுதி அடிப்படையிலும் அவர்கள் விரும்பும் தொழிலுக்கு நியமித்தலே சிறப்பானதாகும். ஐக்கிய நாடுகள் சாசனத்தின் படி "ஒரு பிரஜை தான் விரும்பும் தொழிலைச் செய்யும் உரிமை உண்டு" இதனால் அரசு தான் தோன்றித்தனமாக எழு மாறாக நியமனங்களை வழங்குமாக இருந்தால், தொடர்ந்தும் அரச வெற்றிடங்களில் இழுபறிநிலைகளையே சந்திக்க நேரிடும்.

அன்றைய குடியேற்ற நாடுகளின் திணிப்புக் கல்வியே இன்றைய படித்த பட்டதாரிகளை வேலையற்றோர் படைக்குள் நுழைய வைத்தது போல், இன்றைய திணிப்பு வேலைவாய்ப்பு நாளை அவர்களை நடுத்தெருவில் விட்டுவிட்டதாக அமைந்து விடக்கூடாது என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.

இதே போன்றுதான் இலங்கையில் இளைஞர்கள் படித்ததுறை ஒன்று, பயிற்சி பெற்ற துறை இன்னொன்று, வேலைபார்க்கும் துறை மற்றொன்று எனத் திரிபடைந்து செல்கின்றன.

இந்த நிலை - அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் நாடுகளுக்கு ஆரோக்கியமானதல்ல. ஏனெனில் இங்கு விருப்பற்ற தொழிலாலும், பொருத்தமற்ற துறையாலும் தகுந்த வெளியீட்டைக் கொடுக்க முடியாது என்பதே உண்மையாகும்.

இதனால் இவர்களுக்காக அரசு வழங்கும் ஊதியம் பொருளாதார நோக்கில் தகுந்த வெளியீட்டுக்கு கிடைக்கும் உள்ளீடாக அமையமாட்டாது என்பதே உண்மையாகும். இந்த நிலை - பட்டத்தையும், பயிற்சியையும்விட, அரசுகளும் - அதிகாரங்களுமே பணி அமர்வுகளை தீர் மர்னிப்பதாக அமைகிறது.

**எஸ்.ஜெயா**

## சுயதொழில்

# பனந்தும்பு தயாரித்தல்

எமது பிரதேசத்தில் பெருமளவிலான பனை மரங்கள் காணப்படுகின்றன. பனையின் இளம் வடலிகளின் கங்கு மட்டைகளில் இருந்து, தும்பு எடுக்கப்படுகிறது. வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் பனந் தும்புக்கு அதிக கிராக்கி உண்டு.

பல வெளிநாடுகள் பனந்தும்பை இறக்குமதி செய்வதில் ஆர்வம் காட்டு வதனால், நிலையான சந்தை வாய்ப்புண்டு. பனந்தும்பிலிருந்து தும்புத் தடிகள், தூரிகைகள் துடைப்பான்கள் போன்றன தயாரிக்கப்படுகின்றன.



கங்கு மட்டை

தும்படிக்கும் இயந்திரம்

தும்பு தரம் பிரித்தல்

தும்பிலிருந்து தூரிகை

வீட்டில் ஒரு பகுதியில் இந்தத் தொழிலை ஒரு உபதொழிலாக மேற்கொள்ள முடியும். பலர் சேர்ந்து ஒரு குழுவாகவும் இணைந்து இந்தத் தொழிலை மேற்கொள்ளலாம். இதற்குரிய தொழில் நுட்பம் இலகுவானது. சிறிது நாள் பயிற்சியுடன் தொழிலை ஆரம்பிக்கலாம்.

இதற்குத் தேவையான மூலப் பொருள் - இளம் பனை வடலிகள்.

உப கரணங்கள் - சுத்தியல், தும்பு வாரும் சீப்புகள், கங்கு அறுக்கும் கத்தி, கங்கு அடிக்கும் மரப்பொல், கங்கு வைத்து அடிக்கும் அடைகல், மட்டப் படுத் தும் கத்தி.

நாளொன்றுக்கு 2 கிலோகிராம் தும்பு அடிக்க முடியும். பனந்தும்பின் ஒரு சிறுபகுதித் தேவையைக்கூட பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி வளர்ச்சியடையவில்லை. எனவே பனந் தும்பைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் வாய்ப்புண்டு. தரமான தும்புகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, வருவாயையும் ஈட்டிக் கொள்ள முடியும்.

**பனந்தும்பு பெறப்படும் செய்முறை-**

தும்பு சேகரிப்பதற்கு பத்து வருடத்துக்கு மேற்பட்ட வளர்ச்சியடைந்த வடலிகள் பயன்படுகின்றன. ஓலை பனையுடன் பற்றிப்பிடித்திருக்கும் பகுதி கங்கு எனப்படும். இந்தக் கங்கிலிருந்தே தும்பு எடுக்கப்படுகிறது. இந்தக் கங்கைத் தனித்தியாக்கி, அடைகல்லின் மேல் வைத்து மரப்பொல்லால் அடிக்கும்போது, அவை நைந்து மென்மையடைகின்றன.

தும்பைச் சுற்றியிருக்கும் சோற்றிப்பாகம் வேறாக்கப்படும். பின் தும்புடைய பகுதியைப் பகிர்ந்து இரும்பாணி பொருத்தப்பட்ட சீப்பிலிட்டு, அவற்றை வாருதல் வேண்டும். இந்த நிலையில் தும்பைப் பற்றியிருக்கும் எஞ்சிய சோற்றிப்பாகம் வேறாக்கப்பட்டு, தும்பு கைக்குவரும். இந்தத் தும்பு கறுப்பு வெள்ளை என இனம்பிரித்தெடுக்கப்பட்டு, வெயிலில் காயவிடப்படுகிறது. இது கோரா தும்பு எனப்படும்.

**கோராதும்பு சுத்திகரிக்கும் முறை-**

கோராத்தும்பை 24 மணிநேரம் ஊறவைக்க வேண்டும். பின் இதனை அதற்கென உரிய சீப்பிலிட்டு வாருதல் வேண்டும். அப்போது எஞ்சியிருக்கும் சோற்றிப்பாகமும் நீங்குவதால், தும்பு பளபளப்பாக வருகிறது. பின் தும்பை ஒரு பக்கம் மட்டமாக்கி, பிடியாகக் கட்டவேண்டும். மட்டமற்ற பகுதி வெட்டி நீக்கப்படவேண்டும்.

**இயந்திரமூலம் தும்பு உற்பத்தி-**

இதற்குத் தேவையான உபகரணங்கள் - உருளை இயந்திரம், சீப்பு இயந்திரம் மெருகூட்டி என்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட கங்குகளை உருளை இயந்திரத்திலிட்டு, நசிக்கப்படுகின்றன. பின்னர் இவை சீப்பு இயந்திரத்திலிட்டு வாரும்படியாகப் பகிர்ந்தெடுக்கப்படுகின்றன. சீப்பிலிட்டு வாரியெடுக்கப்பட்ட தும்பு, பின்னர் மெருகூட்டி எனப்படும் இயந்திரத்திலிட்டு சுத்தப்படுத்தப்படுகிறது. பின்னர் நீள்வாரியாக இவை அளவுபடுத்தி எடுக்கப்படுகின்றன.

★★★★★★

## சிறுவர்களை புலிகள் அமைப்பில் சேர்ப்பதாக

# யுனிசெப் விடுத்த அறிக்கைக்கு தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்

## ஐ.நா செயலருக்கும் கடிதம்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்பு சிறுவர்களை படையில் இணைத்துக் கொள்கிறது என்று யுனிசெப் அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையை கண்டித்து தமிழ் மணவர் அமைப்பினரால் ஐ.நா செயலருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னிப்பிரதேசத்தில் சிறுவர்களின் நலன்கள் மிகவும் சிறப்பாகப் பேணப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் யுனிசெப் அமைப்பு விடுத்த அறிக்கை மாணவர்களாகிய எம்மை மிகவும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு சிறுவர்களைப் படையில் இணைத்துக்கொள்கின்றது என்ற செய்தியானது உண்மைக்குப் புறம்பானதும், சோடிக்கப்பட்டதும், அரசியல் லாபம் கருதிச் செயற்படுபவர்களின் பொய்யான தகவல்களை அடிப்படையாகக் கொண்டதும், உண்மைகளை, மூடிமறைக்கும் வகையில், ஒரு பக்கச்சார்பாக வெளியிடப்பட்டதாகவுமே எம்மால் உணரமுடிகிறது.

போரின் வடுக்களையும், துன்ப துயரங்களையும் சுமந்து, கல்வியை மூலதனமாகக் கொண்டு அயராது கற்கும் எமது மாணவர்களுக்கு ஏற்படும் தடங்கலையும், இடையூறுகளையும் நீக்கி எமது கல்வி முன்னேற்றத்துக்காக அயராது உழைக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பானது - பெற்றோர்களை இழந்த சிறுவர்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக பராமரிப்பு நிலையங்களையும் நிறுவி, ஏனைய வறிய மாண்வர்களுக்கான கல்வித் தேவைகளையும் வழங்கி வருகின்றது என்ற உண்மை மறைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பொருளாதார நெருக்கடிகளாலும், குடும்ப வறுமை காரணமாகவும், விரக்தி காரணமாகவும், சிறுவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முன்வரும்போதெல்லாம் - அவர்கள் சிறுவர் தொடர்பான உரிமைகளை மதித்து, அவர்களின் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு யுனிசெப் ஊடாக பல சிறுவர்களை மீள ஒப்படைத்துள்ளனர் என்பது யாவரும் அறிந்த உண்மை.

இந்த நிலையில் தாங்கள் நேரடியாக வருகைதந்து இங்குள்ள உண்மை நிலையைக் கண்டறிய வேண்டும் என்பதையே தமிழ் மாணவர்களாகிய நாம் விரும்புகிறோம்.

இலங்கையில் எந்தவொரு பகுதியிலும் இல்லாதவாறு வடக்கு - கிழக்கு பகுதிகளிலேயே சிறுவர்களின் உரிமைகள் உயர்நிலையில் வைத்து மதிக்கப்படுகின்றது என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மந்தகதியில் நடைபெறும் வீதி திருத்தப் பணிகள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டுடான் வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து தற்போது புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவருகிறது.

இந்த வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அவை மந்தகதியிலேயே இடம் பெற்று வருகின்றன. இதனால் பயணிகளும், வாகன உரிமையாளர்களும் பெரும் அவலங்களை எதிர் நோக்குகின்றனர்.



வன்னிப் பதிவுகள்

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### பெப்ரவரி 24

1896 :- பிரான்ஸ் விஞ்ஞானியான பெக்குவேரல் என்பவர் யுரேனியத்தின் கதிரியக்கத் தன்மையை கண்டுபிடித்தார். இவர் இதற்கு சூட்டிய பெயர் யுரேனியக் கதிர்கள் என்பதாகும்.

1918 :- எஸ்தோனியாவின் சுதந்திரதினம்.

1938 :- பல் துலக்கும் தூரகையிலுள்ள சுனைகளை முதன்முதலாக நைலோனில் ஓர்லிங்டனிலுள்ள "டியூ பாண்ட்" என்ற தொழிற் சாலை உற்பத்தி செய்தது.

1945 :- ஜெர்மனி மீது எகிப்து போர் தொடுக்கும் என்று எகிப்து பிரதமர் அகமட் பாட்ஷா அறிவித்த சிறிது நேரத்திலேயே கொலை செய்யப்பட்டார்.

1966 :- ரஷ்ய விண்கலம் லூனா - 9 சந்திரனில் இறங்கியது.

1967 :- சியராலியோனில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, இராணுவ அதிகாரிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

1969 :- அட்லாஸ் செண்டார் என்ற ஏவுகனை மூலம் மரைனர் - 6 என்ற விணகலம் செவ்வாயை நோக்கிச் செலுத்தப்பட்டது. இது செவ்வாய கிரகத்துக்கு அருகே 3,410 கிலோ மீற்றர்வரை சென்று செவ்வாயின தென் கோளப் பகுதியினது விபரங்கள் அடங்கிய 200 படங்கள் வரை பூமிக்கு அனுப்பிவைத்தது.

1987 :- 186,000 ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய மெகல்லன் மேகத்திலுள்ள ஒரு நட்சத்திரம் வெடித்துச் சிதறியது. அதன் ஒளி இன்றுதான் புவியை வந்தடைந்தது. இந்த நட்சத்திரம் சூரியனைவிட பத்து மடங்கு பெரியது.

தொகுப்பு - சந்துரு

## முட்கொம்பன் பகுதி விவசாய நிலங்களுக்கு

# நீர் விநியோகம் இன்மையால் பயிர்கள் அழிவுறும் நிலை!

(பூநகரி)

பூநகரி - முட்கொம்பன் பிரதேச விவசாயிகளுக்கு இதுவரை மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கென நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நீர் விநியோகிக்கப்படவில்லை. இதனால் செய்கைபண்ணப்பட்டுள்ள பயிர்கள் தற்போது நிலவும் கடும் வரட்சியால் அழிவுறும் நிலையில் உள்ளன.

இந்தப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் கடந்த 7 ஆம் திகதி பூநகரி உதவி அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் முட்கொம்பன் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையாளருக்கு நீர் விநியோகிப்பதென தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் இதுவரை நீர் விநியோகிக்கப்படவில்லை.

இதனால் குளத்து நீரை நம்பி மேட்டு நிலப்பயிர்ச் செய்கையை மேற்கொண்ட இந்தப் பகுதி விவசாயிகள், தம்மால் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர்கள் எரிந்து அழியும் நிலையில் உள்ளதாக கவலை தெரிவித்தனர்.

## காலநடை வைத்தியநிலையம் அமைக்கக் கோரிக்கை

அக்கராயன் பிரதேசத்தில் கால்நடை வைத்திய நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கால்நடை வளர்ப்பு அதிகரித்த இந்தப் பிரதேசத்தில் கால்நடை வைத்திய நிலையம் இன்மையால் கால் நடை வளர்ப்போர் நீண்ட தூரத்துக்கப்பாலுள்ள கிளிநொச்சி நகருக்கு செல்ல வேண்டியுள்ளது.

எனவே இந்தப் பிரதேசத்தில் கால்நடை வைத்திய நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அடிப்படை வசதிகள் ஏதுமின்றி இயங்கும் பன்னங்கண்டி தமிழ்க்கலவன் பாடசாலை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பன்னங்கண்டி தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதி இன்மை போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகிறது.

இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 9 வரையான வகுப்புகளில் 180 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்கள் போரினால் சேதமடைந்த பழைய கட்டடத் தொகுதியிலேயே கல்வி கற்று வருகின்றனர்.

இதனால் மணவர்கள் பாரிய இடநெருக்கடிக்கு முகங்கொடுப்பதுடன், யுத்தத்தால் சேதமாக்கப்பட்ட கட்டடத்தில் இருந்து கல்வி கற்பதால் ஆபத்துக்களையும் எதிர் நோக்குகின்றனர்.

இங்கு அதிபர் உட்பட 9 ஆசிரியர்கள் தேவையாக உள்ள போதிலும், அதிபர் உட்பட 5 ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர். இதனால் மணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் இடையூறுகள் ஏற்படுகின்றன.

இதேவேளை, இங்கு 120 அடி நீளமான புதிய கட்டடம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடமாகியும், கட்டடப் பணிகள் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவரின் நலனைக் கருத்திற் கொண்டு கட்டட வசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற குறைகளை நிவர்த்தி செய்து, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (09)

## நெடுங்கேணி வைத்தியசாலையில்

# நிரந்தர வைத்தியர் இன்றி நோயாளர்கள் பெரும் சிரமம்

வவுனியா - நெடுங்கேணி பிரதேச சுற்றயல் கூறு மருத்துவமனையில் நிரந்தர வைத்தியர் இன்மையால், அங்கு செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் இராணுவத்தினரால் கைப் பற்றப்பட்ட நெடுங்கேணி பிரதேசம் பின்னர் ஓயாத அலை நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு அங்கு மக்கள் மீளக் குடியமரத் தொடங்கியதையடுத்து சுற்றயல் கூறு மருத்துவமனையும் செயற்படத் தொடங்கியது.

நெடுங்கேணி பிரதேச சபைக் குட்பட்ட பகுதியிலுள்ள ஒரே ஒரு சுற்றயல் கூறு மருத்துவமனையாக இந்த மருத்துவமனை உள்ளதுடன், இங்கு நிரந்தர வைத்தியர் இல்லாத தால் நோயாளர்கள் பெருஞ் சிரமங் களை எதிர்நோக்குகின்றனர்.

# ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்!


## இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

வவுனியா அரசினர் வைத்திய சாலையில் கடந்த சனிக்கிழமை இரவு செய்தி சேகரிக்கச் சென்ற வவுனியா செய்தியாளர்கள், இராணுவத்தால் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தயா ரட்ணாயக்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

வவுனியாவில் நீண்ட நாட்களாக இராணுவத்தினருக்கும், ஊடகத் துறையினருக்கும் இடையில் இருந்து வந்த நல்லெண்ணம் தற்போது அற்றுப்போய் இருப்பதாகவும், இது தொடர்பாக தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளபோதும், ஒரு சாராரின் விபரங்களையே பெறமுடிந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு வவுனியா வைத்தியசாலைக்கு இராணுவத்தினர் தொடர்பான செய்தியைச் சேரிக்கச் சென்ற வவுனியா செய்தியாளரை, செய்தி சேகரிக்கவிடாது இராணுவ அதிகாரி ஒருவர் தடுத்து, செய்தியாளரை அச்சுறுத்தியமை வன்மையான கண்டனத்துக்குரியது எனறும், இது தொடர்பாக உடனடியாக ஆராயுமாறு வன்னி பத்திரிகையாளர் சங்கம் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொடவிடம் எழுத்து மூலம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நேற்றுமுன்தினம் வன்னிக்கு விஜயம் செய்த நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் சென்று அங்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்டுவரும் தற்காலிகக் குடியிருப்புக்களைப் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## அரசின் வெற்று அறிவிப்புகள்

இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கு மிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடராமல் உள்ளமையே யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு ஆபத்து ஏற்படும் நிலமை இப்போது உருவாகியுள்ளமைக்கு முக்கிய காரணமாகும் என்பதுடன், இதுவே இன்றைய பதற்றமான, நிச்சயமற்ற, அமைதிச் சூழலுக்கு அச்சுறுத்தலான கட்டம் ஏற்படவும் காரணமாகும் என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளது உண்மையேயாயினும், அவர்இந்த நிலை உருவாக யார் காரணம் என்பதை வெளிப்படையாக கூறத்தவறிவிட்டார் என்றே தோன்றுகிறது.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாடுகளை ஆரம்பம் முதலே கடுமையாக விமர்சித்தும், கண்டித்து, எதிர்த்தவர்களே இன்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளார்கள்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியின் போது மேற்கொள்ளப் பட்ட சமாதானப் பேச்சுக்களை ஜனாதிபதியும், அவரது சகாக்களும் வெளிப்படையானப் பொதுமேடைகளில் நிராகரித்து வருவதுடன், நோர்வே அரசின் அனுசரணைமுயற்சிகளையும் பக்கச் சார்பானதென்று பிரசாரம் செய்ததுடன், நோர்வேயை அப்பணியினின்றும் வெளியேறுமாறும் கோஷமெழுப்பி பேரணி நடத்தியதையும் அனைவரும் அறிவர்.

அதேபோல், இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ ஆவணம் அன்றைய ரணில் தலைமையிலான அரசிடம் கையளிக்கப்பட்டதையடுத்து, அத்தகையதொரு அமைப்பை முற்றாகவே எதிர்த்த ஜனாதிபதியும், அவரது தோழமைக்கட்சிகளும் அதனை நாட்டுப்பிரிவினைக்கான - தமிழீழத்திற்கான வழி என்று கத்திக் கொண்டு, இரண்டொருநாளிலேயே ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார பலத்தைக் கொண்டு, சட்டபூர்வமாக அரசியல் சதியொன்றினை ரணில் நாட்டில் இல்லாதவேளையில் மேற்கொண்டு அன்றைய ஆட்சியைக் கலைத்ததன் மூலம் சமாதான முன்னெடுப்புகளை நிரந்தரமாகவே கேள்விக்குறியாக்கினர்.

அந்த தந்திரோபாய அரசியல் நகர்வின் மூலம் தாங்களே சிங்கள பௌத்த சமூகத்தின் பிரதான ரட்சகர்கள் என தென் பகுதிமக்கள் மத்தியில் சுய தம்பட்டம் அடித்ததுடன், அடுத்து நடந்த பொதுத்தேர்தலில், தென்பகுதி மக்களில் இனவாத உணர்வைத் தூண்டிவிட்டு தமது அரசியல் நோக்கத்தை அடையமுயன்று வெற்றியும் கண்டனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் தோல்விக்கான காரணங்கள் பல இருந்த போதிலும், ஜனாதிபதியும் அவரது இனவாத சகாக்களும், சமாதான முயற்சிகளை மக்கள் ஆதரிக்கவில்லை என்பதையே காரணமாகக் கூறினர். எனினும், பதவியை கைப்பற்றிக் கொண்டபோதிலும் சமாதானப் பேச்சுக்களை முற்றாகக் கைநழுவவிட்டு யுத்தத்தை ஆரம்பிக்கும் ஆற்றலோ, வளமோ, நம்பிக்கையோ அரசிடம் இருக்கவுமில்லை, அதற்கு சர்வதேச சமூகம் ஆதரவு தருவதாகவுமில்லை.

திறைசேரி வெறுமையான நிலையில், சர்வதேச நிதியுதவி வழங்கும் நாடுகளின் மனமோ சமாதான முயற்சிகளுக்கு ஆதரவானவர்களுக்கு உதவும் நிலையிலேயே இறுக்கமாக இருந்ததால் - சமாதான நகர்வுகளை விட்ட இடத்திலிருந்து தொடர வேண்டிய நிர்ப்பந்தம் புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஏற்பட்டது. ஆனாலும், அதனை விசுவாசமாக மேற்கொள்ளும் தேசியநலனின் அடிப்படையிலான செயற்திட்டம் எதுவும் அரசுக்கோ-ஜனாதிபதிக்கோ இருக்கவில்லை. அப்படி இருந்தால் கூட அவரின் பேரினவாத தோழர்களான ஜே.வி.பியினர் அதற்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கவும் இல்லை.

எனவே தான் ஒருமைப்பாடற்ற கொள்கைநிலைகளைக் கொண்ட கட்சிகளின் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் சமாதானத்தின் எதிர்காலம் அச்சமூட்டும் வகையில் கேள்விக்குரியதாயிற்று.

சும்மா ஒரு பேச்சுக்கு சமாதானம் என்ற சொல்லை வெளியே உச்சரித்து வந்த ஜனாதிபதியால், ஜே.வி.பியினரின் மிரட்டலுக்கு அடிபணிந்து சமாதானபேச்சு நோக்கி ஒரு மில்லிமீற்றர் தானும் நகர முடியவில்லை. ஆனால், சமாதானத்திற்கெதிரான பாதையில் கடந்த பத்து மாதகால ஆட்சியில் வெகு தூரம் அரசு முன்னேறியுள்ளது என்றால் அது மிகையில்லை.

சமாதான முயற்சிகளின் மூலாதாரமான புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டு மூன்றாண்டுகள் நிறைவுற்றநிலையில்-அதில் அரச தரப்பில் கையொப்பமிட்டவரான அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, போர்நிறுத்த உடன்பாடும், அது தொடர்பான நடவடிக்கைகளும் மிக மோசமான முறையில் அச்சுறுத்தலுக்குள்ளாகி இருப்பதாக கூறியுள்ளதை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

இந்த நிலையில், இடைக்கால நிர்வாகம் தொடர்பாக-அதற்கான சபையை நிறுவுவதுகுறித்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தத்தயார் என்று அரசு அறிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அரசின் இந்த கூற்றையும் முழுமையாக நம்பமுடியுமா என்பது சந்தேகமே ஆகும்.


இந்த முடிவை அரசு பதவியேற்றவுடனேயே அல்லது சிறிது காலத்திலே எடுத்திருந்தால் இதற்குள் ஆக்கபூர்வமான பல விடயங்களை செய்திருக்கமுடியும். ஆனால், எல்லாவகையிலும் தமிழ் மக்களை புறந்தள்ளி மூன்றாம் தரப்பாக்கி ஒதுக்கிச் செயற்படுவதன் மூலம் அவர்களின் நம்பிக்கையை முழுமையாக இழந்துள்ள அரசும், ஜனாதிபதியும் புதிதாக எந்த உள்நோக்கத்துடன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள் என்பது பொதுவான சந்தேகமாகும்.

அரசுடன் ஜே.வி.பி இணைந்திருக்கும் வரை இம்மாதிரியான, அரச தரப்பு அல்லது ஜனாதிபதி தரப்பு அறிவிப்புக்கள் யாவும் நேர்மையாக இருக்கும் என எவராலும் நம்பவேமுடியாது.

அதே போல் புற அழுத்தங்களுக்கு உட்பட்டு விடுக்கப்படும் இத்தகைய அறிவித்தல்களும் ஆக்கபூர்வமான, அர்த்தபூர்வமான செயற்பாடுகளை நோக்கி நகரும் என்றும் கூறமுடியாது.

அரசும் ஜனாதிபதியும் இது விடயத்தில் தமது நேர்மையை தமிழ் மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் உறுதிசெய்யாத வரை இவையெல்லாம் காற்றோடு கலந்து மறையும் உயிரற்ற வார்த்தைகளாகவே இருக்கும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தடைபோடுவதன் மூலம் அவர்களே நாட்டைப் பிரிக்கிறார்கள்

மட்டக்களப்பில் சுனாமிப் பேரழிவால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு சமுதாயம் இருக்கிறது உமக்குத் தெரியுமா? என்று கேட்டார் பரமசிவம்.

இதையெல்லாம் தெரிந்துகொள்வதற்குத் தானே எனக்கு முன்பாகவே நீர் இங்கு வந்தீர். நீரே சொல்லும் என்றேன். மட்டக்களப்பில்மட்டுமல்ல, இலங்கையிலேயே கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து! இப்போது மட்டக்களப்பில் மட்டும்தான் இந்தச் சமுதாயம் ஒரு சமுதாயமாக எஞ்சியிருக்கிறதாம். பறங்கியர் என்றழைக்கப்படும் சமுதாயத்தைத்தானே சொல்லுகிறீர் என்று கேட்டேன்.

உமக்கும் விஷயம் விளங்குகிறது. பேகர் (BURGAR) என்று இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். தமிழில் இவர்களைப் பறங்கியர் என்று பல்லாண்டுகளாக அழைத்து வருகிறோம். இலங்கையில் - சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் என நான்கு இனத்தவர்கள் வசிப்பதாகச் சொல்லப்படுவதுண்டு. இந்தச் சமுதாயத்தினர் சார்பில் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இவர்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் ஒருவர் நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டதாகவும் நினைவு. இந்தியாவில் ஆங்கிலோ - இந்தியர் என்று ஒரு சமுதாயம் அழைக்கப்படுகிறது ஆங்கிலேயர்களுக்கும், இந்தியர்களுக்கும் ஏற்பட்ட மணவாழ்க்கையில் பிறந்தவர்களே ஆங்கிலோ - இந்தியர் என்றழைக்கப்படுகின்றனர். இலங்கையிலும் இப்படியொரு கலப்புத் திருமணம் போர்த்துக்கீசியர், டச்சுக்காரர் காலத்திலிருந்து ஏற்பட்டு பறங்கியர் சமுதாயம் ஏற்பட்டிருக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

மிகச் சிறிய தொகையினராக மட்டக்களப்பில் எஞ்சியிருக்கும் பறங்கியர் சமுதாயம் - சுனாமிப் பேரழிவால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சமுதாயத்தில் எட்டுச் சதவீதம் சுனாமி அனர்த்தங்களால் அழிந்துவிட்டதாம். எஞ்சிய மக்களைப பாதுகாப்பான ஓரிடத்தில் குடியமர்த்துவது பற்றி ஆலோசிக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறது. பறங்கியர் சமுதாயம் உற்சாகமான மகிழ்ச்சியாக வாழ்க்கையைக் களிக்கும் உல்லாசமான மக்களைக் கொண்டது.

இலங்கையில் மொழிப் பிரச்சினை தலைதூக்கியபோது, தங்களின் எதிர்கால நன்மைக்குச் சிங்களம் தான் உதவும் என்று சிங்களத்தைப் பிள்ளைகளுக்குப் போதனா மொழியாக ஏற்றுக் கொண்டனர். தமிழர் தாயகத்தில் ஜனநாயகமும், சாத்வீகப் போராட்டமும் தோல்வியடைந்ததும், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கியபோது, பறங்கியர் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரும் தமிழ் இளைஞர்களுடன் இயக்கங்களில் இணைந்து போராடினர் என்று நண்பர் பரமசிவம் மட்டக்களப்பு பறங்கியர் சமுகத்தின் வரலாற்றையே சுருக்கமாகச் சொல்லிமுடித்தார்.

எனக்கு முன்னாடியே, எனக்குச் சொல்லாமலே மட்டு நகர் வந்தனீர என்ன செய்து கிழித்தீர்என்று கேட்டேன். இதைத் தானே உமக்குச்சொல்லிக்கொண்டு வருகிறேன் என்றார் பரமசிவம். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் புஷ்ஷும், கிளின்ரனும் மட்டக்களப்புக்கு வருவார்களா என்று சில நலன்புரி நிலையங்களில் உள்ளவர்கள் ஆதங்கப் பட்டனர். ஐ.நாசெயலர் கொபி அனானுக்குத்தடை போட்டவர்கள் புஷ்ஷையும், கிளின்ரனையும் விடுவார்களா? என்று அதே நலன்புரி நிலையங்களில் இருந்த மற்றும் சிலர் சொல்லிவிட்டார்கள் என்று பரமசிவம் மேலும் சொன்னார். வெளிநாடுகளில் இருந்து வருபவாகளிருக்கட்டும், நமது அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மலையகத்துக்கு வருவார் என்று வெளியான செய்தியைப் பார்த்தே ஹெலஉறுமய பிக்கு கள் சிலர் உதறல் எடுத்துத் துள்ளிக்குதிக்கிறார்கள். மலையகத்துக்கு வந்தால் தமிழ்ச்செல்வனைக் கைது செய்ய வேண்டும் என்றும், ஒரு பிக்கு நாடாளுமன்றத்திலேயே கூச்சல் போட்டிருக்கிறார். ஏன் இப்படி இவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்றேன்.

கடந்த வருடமோ அதற்கு முன்னரோ, பின்னரோ சரியாக நினைவில்லை. இந்த எல்லா வெல மெத்தானந்த தேரர் கிழக்கு மாகாணத்தில் ஒரு கிராமத்தில் புதையுண்டு கிடந்து எடுத்ததாகச் சொல்லப்படும் ஒரு கல்லைப் போய்ப் பார்க்கப் போவதாக பெரிய ஆரவாரம் செய்தார். ஊடகங்களும், உறுமயக்களும், ஜே.வி.பியும் இதற்குப் பரபரப்பாகச் செயற்பட்டார்கள். விடுதலைப புலிகளின் முகாம்களைத் தாண்டிச் செல்லப் போவதாகவும் சொன்னார்கள். பரிவாரங்கள் சூழ எல்லாவல மெத்தானந்த தேரர் அந்த இடத்துக்குச் சென்று திரும்பினார்.

சிங்கள ஊடகங்கள் புகைப்படங்கள் எடுத்து வெளியிட்டன. தொலைக்காட்சிகளும் பெரிதுபடுத்திக் காண்பித்தன. போய்த்திரும்பிய பின்னரும் பெரும் சாதனை செய்ததாக தம்பட்டம் அடித்தனர். இதை விடுதலைப்புலிகள் கண்டு கொள்ளவே இல்லை. இதனால் ஆரவாரம் எல்லாம சப்பென்று போச்சுது என்றார் பரமசிவம்.

எங்கள் நாட்டில் எங்கேயும் போவதற்கு உரிமை இருக்கு தென்றுதான் மெத்தானந்த தேரர் புறப்பட்டுப் போய் திரும்பினார். தமிழ்ச் செல்வன் மலையகம் போவதற்கு தடை போடுவதென்றால், தமிழ்ச்செல்வனை தமிழீழத்தின் பிரதம மந்திரியாக புத்த பிக்குகளின் ஹெல உறுமயக் கட்சி கருதுவதுதானே காரணம். நோர்வேக்கு கொழும்பில் எதிர்ப்புக் காட்டியது போல தமிழ்ச்செல்வனுக்கும் புத்தபிக்குகள் எதிர்ப்பு குரல் கொடுக்கிறார்கள். நாட்டை இவர்கள் பிரித்துவிட்டார்கள் என்றார்.

## வாசகர் நோக்கு

# பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் துரித கதியில் கிடைக்குமா?

யாழ். செயலகத்துக்கு பதிவுச்சான்றிதழ்கள் பெறும் பிரிவில் தினமும் அதிகளவான மக்கள் பிறப்பு, இறப்பு, மற்றும் திருமணச் சான்றிதழ் பெறுவதற்காக நீண்ட வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிகிறது.

நெடுந்தொலைவில் இருந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் காலையில் நேரத்துடன் வந்து பதிவுச் சான்றிதழ்கள் பெறும் பிரிவில் மணித்தியாலக்கணக்காக நீண்ட வரிசையில் நின்றாலும் கூட, இவர்களுடைய வேலைகள் இலகுவில் முடிவதில்லை.

காரணம் யாழ். செயலக பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெறும் பிரிவில் இதற்கான வேலைகள் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன. போதியளவு ஆளணி வசதியும் இந்தப் பிரிவுக்கென இல்லை.

அத்துடன் இந்தப்பிரிவுக்கென கட்டடத்தின் சிறிய பகுதியே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறிய பகுதிக்குள் பெருமளவு மக்கள் கூடி நிற்பதால் இட நெருக்கடியும் காணப்படுகிறது.

கைக்குழந்தைகள் சகிதம் கூட பல தாய்மார்கள் நீண்ட வரிசையில் நிற்பதால், பல்வேறு சிரமங்களை அவர்கள் எதிர்நோக்குகிறார்கள்.

இன்றைய நாட்களில் பிறப்பு மற்றும் ஏனைய சான்றிதழ்கள் மக்கள் வாழ்வில் பிரதான இடம் வகிக்கிறது. நேர்முகத் தேர்வுகள் இதர தொழில்சார் நடவடிக்கைகளுக்கு பிறப்பு சான்றிதழ்கள் முக்கியமானதாகும். எனவே இந்தச் சான்றிதழ்களைப்பெற செயலகத்துக்கு வருவோர் அங்கு இவற்றை பெறுவதற்கான வேலைகள் வேகமாக நடைபெறாததன் காரணமாக உரிய காலத்தில் தமது சான்றிதழ்களைப்பெறத் தவறி தமது அரிய பல வாய்ப்புக்களை நழுவ விடுகின்றனர்.

கணனியுகத்தில் உலகில் எல்லா வேலைகளும் மின்னல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்க, எமது மண்ணில் இவ்வாறான அலுவலக நடவடிக்கைகள் மந்த கதியில் நடைபெற்று வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே மக்களின் முக்கிய ஆவணங்களான பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களை பெற யாழ். செயலக பதிவுப் பிரிவில் இவற்றை மக்கள் சிரமம் இன்றி உடனுக்குடன் பெற்றுக்கொள்ள யாழ். செயலக பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெறும் பிரிவு பகுதிக்கு போதிய ஆளணிகளை நியமித்து வேலைகளை துரிதப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*அமிலன்*
*யாழ்ப்பாணம்*

பகுதி 46

சாங்கர்

# காற்றே நீ எம் கதைகேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

இந்த விடயத்தை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விட வேண்டும் என அது வலியுறுத்தியது.

ஒன்பது பேர் இதற்கு உரிமை கோரினாலும், ஜெயராஜ் - ஜூனிற்றா தம்பதியினர் இந்தப் பிள்ளை தமது பிள்ளை அபிலாஷ் தான் என்று உறுதியாக நின்றனர். 19.10.2004 அன்று தான் இந்தக் குழந்தையைப் பிரசவித்ததாகத் தாயார் அழுது குழறினார். தற்கொலைக்கும் முயற்சித்தார். அவரது குடும்பத்தினர் வைத்தியசாலை பணியாளர்களை தாக்கவும் முயற்சித்தனர்.

கடமைக்கும், உரிமைக்குமான இந்த சிக்கலான விடயத்தில் - நீதிவான் மொகைடீன் உண்மையான பெற்றோர் யார் என்பதை மரபணு பரிசோதனை மூலம் தீர்மானிக்க வேண்டும் என 02.02.2005 அன்று தீர்ப்பளித்தார்.

சற்று நேரத்தில் நீதிமன்றிலிருந்து ஆஸ்பத்திரிக்கு கால் நடையாக ஓடிச் சென்ற பெற்றோரும், மற்றோரும் - குழந்தை இருந்த விடுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்தனர். அப்போது கடமையில் இருந்த தாதிமார், ஊழியர்கள் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. ஓடிச்சென்று குழந்தையைத் தூக்கிய பெற்றோர்களை ஊடகவியலாளர்கள் பின் தொடர்ந்து ஒளிப்பதிவு மேற்கொண்ட வண்ணம் சென்றனர். இந்த வேளை விடுதியின் வெளிப்புறக்கதவு பூட்டப்பட்டது.

உடனே கல்முனைப் பொலிஸாருக்குத் தகவல் போகவே, அவர்கள் வந்து குழந்தையை வைத்தியசாலை தாதியிடம் ஒப்படைத்த பின்னர் -பெற்றோரையும், ஊடகவியலாளரையும் வெளியே செல்ல அனுமதித்தனர். சுமார் 45 நிமிட நேரம் இந்தக் களேபரம் நடந்தது. அதன் பின்னர் வைத்தியசாலை ஊழியர்கள் அனைவரும் தெருவில் இறங்கி, வைத்தியசாலையை ஸ்தம்பிக்கச் செய்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன் பின்னர் உரிமை கோரிய பெற்றோர் - ஆசிரியர் சிறிஸ்கந்தராசா, பிரதீப் ஆகிய நால்வரையும் பொலிஸார் கைது செய்தனர். குழந்தைக்கு பொலிஸாரின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டது.

இறுதியாகப் பெற்றோர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். குழந்தையும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இறுதியில் ஜெயராஜ் - ஜூனிற்றா தம்பதியினரே இந்தக் குழந்தையின் பெற்றோர் என்பது உறுதியாயிற்று.

16.02.2005 அன்று நீதிமன்றம் 22 பக்கங்கள் அடங்கிய தீர்ப்பில் குழநதையைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டது. நீதிவான் எம்.எம் மொகைடீன் தமது தீர்ப்பில் - பேராசிரியர் மாயா வி.டி.குணசேகராவால் நடத்தப்பட்ட மரபணுச் சோதனையைச் சாட்சியமாக வைத்து, இதனது உயிரியல் ரீதியான பெற்றோரான ஜெயராஜ் - ஜூனிற்றா தம்பதிகளிடம் ஒப்படைப்பதாகக் குறிப்பிட்டார்.

ஜெயராஜ் - ஜூனிற்றா தம்பதியினரின் மகிழ்ச்சிக்கு கேட்கவா வேண்டும்? வைத்தியசாலை நிர்வாகத்தினரைக் கட்டியணைத்து, தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். உண்மையான பெற்றோரிடமே குழந்தையை ஒப்படைக்க வைத்தியசாலை நிர்வாகம் பொறுப்புடன் நடந்து கொண்டுள்ளது.

இந்த விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் நடந்து கொண்டது சரியா? இவர்களைத் தவிர வேறெவரும் இறுதியில் உரிமை கோராத நிலையில் மரபணு பரிசோதனை தேவையா? என்ற கேள்விகள் எல்லாம் எழுந்தன.

ஆனால், உண்மையான பெற்றோர் அவர்கள் தான் என்பதை விஞ்ஞான ரீதியாக நிரூபித்து, அவர்களிடம் ஒப்படைக்காது விட்டால் - அபிலாஷ் நாளை வளர்ப்புப்பிள்ளை என்று இந்தச் சமூகம் பழிக்கும் நிலை இந்தக் குழந்தைக்கு ஏற்படலாம். அவ்வாறான நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகவே மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்பது தெளிவுபடுத்தப்பட்டது.



சாலமன் அரச சபையில் இரு தாய்மார் ஒரு பிள்ளைக்கு உரிமை கோரினர். இங்கோ ஒன்பது தாய்மார் உரிமை கோரினர். ஆனாலும் எல்லாமே சுமுகமாகவே முடிவடைந்தன. 'பேபி - 81' மீண்டும் அபிலாஷாக பெற்றோர் கரங்களில் தவழ்ந்தான்.

பகுதி 47

பாதிக்கப்பட்டோரின் உளவளத்தை மேம்படுத்த பலரும் முயற்சியெடுக்கின்றனர். ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன (gtz) அனுசரணையுடன் - கல்வி அமைச்சும், மாகாணக் கல்வி அமைச்சும் இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

மட்டு. மாவட்டத்தின் மூன்று கல்வி வலயப் பிரிவுகளிலும் இதற்கென 275 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான செயலமர்வுகள் வின்சன் உயர்தர மகளிர் கல்லூரியில் 30-01-2005 அன்று நிறைவுபெற்றன. இதேபோன்ற நடவடிக்கையை கல்முனையில் சகவாழ்வு மன்றம், அக்ஷன் எய்ட் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் மும்பை டாட்டா நிறுவன உளவியல் திணைகள சிரேஷ்ட விரிவுரையாளர் சிறிலதா ஜீவா, இந்தியாவைச் சேர்ந்த ஸீனா சீதால் ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

06-02-2005 அன்று காரைதீவு விபுலானந்தர் ஞாபகார்த்த மண்டபத்தில் மலேசிய நிபுணர்கள் சிறார்களுக்கு உளநலப்பயிற்சி நடத்தினார்கள். இதேபோன்று கல்குடாவில் எஸ்கோ நிறுவனம் உளவியல் ஆலோசனை வழங்கி வருகிறது.

இந்த விடயத்தில் யுனிசெப் நிறுவனமும் கவனம் செலுத்தி, பல செயற்திட்டங்களை நலன்புரி நிலையங்களில் மேற்கொண்டு வருகிறது. மேலும் தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் தாழங்குடா தேசிய கல்வியியல் கல்லூரியில் 160 ஆசிரிய பயிலுநர்களுக்கு இது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மன்றேசா தியான இல்லப் பொறுப்பாளர் பாதர் போல் சற்குணநாயகம் மற்றும் வைத்திய நிபுணர் கணேஸ், கல்வியியல் கல்லூரி அதிபர் ஆகியோர் இது தொடர்பான நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான உடல், உள ஆற்றுப்படுத்தல், உளவியல் சார்ந்த விளையாட்டு நிகழ்வுகளை டிஸ்மியோ நிறுவனம் மேற்கொண்டு வருவதாக, அந்த அமைப்பின் செயலர் வி.எம்.வி. முதலி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பசுமை நிறுவனத்தினருடன் இணைந்து இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இந்தப் பணிகளைக் காத்தான்குடி பிரதேசத்துக்கும் விரிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உளரீதியாகப் பாதிப்புற்ற மூவர் - தற்கொலை புரிந்துள்ளனர். 3 மாதங்களுக்கு முன்னர் திருமணம் புரிந்தவரும், சுனாமியால் கணவனை இழந்தவருமான 20 வயதுடைய சிவறஞ்சனி சிரஞ்சீவி என்பவர் மாமாங்கத்திலும் - ஆறு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்தவரும், சுனாமியால் மனைவியை இழந்தவருமான 21 வயதுடைய தெய்வராசா ஜெயேந்திரன் என்பவர் பனிச்சங்கேணியிலும் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை புரிந்துள்ளனர்.

இதேவேளை கல்குடாவில் - மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளை இழந்த குடும்பஸ்தர் (26 வயது) தீக்குளித்து காயங்களுடன் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே வைத்தியசாலையில் மனைவி, மக்களை இழந்த மற்றொருவரும் மண்ணெண்ணெய் குடித்து தற்கொலைக்கு முயற்சித்த நிலையில். சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் தனது சகோதரனும், அவரது நான்கு பிள்ளைகளும் சுனாமியால் உயிரிழந்ததால், மன விரத்தியுற்ற பெரிய போரதீவைச் சேர்ந்த காளிக்குட்டி புண்ணியமூர்த்தி (வயது 45) நஞ்சருந்தி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை உளரீதியாக அதாவது நெஞ்சு நோ, பசியின்மை, தூக்கமின்மை போன்ற உளப்பாதிப்பு நோய்களுக்கு சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு 50 பேருக்கு தாம் சிகிச்சையளித்ததாக மட்டு. போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எம். தேவராசா தெரிவித்தார். கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஐந்து பேரில், மூவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கியிருந்து, சிகிச்சை பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.


மேலும், சுனாமியால் மனம் நொந்த மக்களை - உளத்தாக்கத்திலிருந்து விடுபடவைத்து, நல்வழிப்படுத்தும் நோக்கமாக விடுதலைப் புலிகள் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

(தொடரும்...)

ஆன்மீகம்

மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்.

# மாசி மகம் மகத்துவமானது



மாசி மாதத்தில் இரு விசேட விரத தினங்கள் வருகின்றன. ஒன்று முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை நோக்கி அனுஷ்டிக்கின்ற மகா சிவராத்திரி. மற்றையது - சிவத்தின் கூறாகிய சக்தியை நோக்கி மேற்கொள்ளப்படுகின்ற மாசி மகம்.

மகம் என்பது இருபத்தேழு நட்சத்திரங்களுள் ஒன்று. மாதந்தோறும் வருகின்ற மக நட்சத்திரத்தோடு கூடிய நாள் இறைவழிபாட்டுக்குச் சிறந்த நாளாகும். எனினும், மாசி மாதத்து மகம்பொருந்திய நன்னாள் - மிகவும் புனிதம் நிறைந்த புண்ணிய நாள் எனலாம்.

மாசி மாதத்து மக நட்சத்திரத்தில் - தக்கன் என்பவனின் மகள் தாட்சாயிணி பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தக்கன் தனது மகளாகச் சிவ பெருமானின் சக்தியாகிய உமாதேவியார் வந்து பிறக்கவேண்டும் என்று வேண்டி, பெருந்தவம் இயற்றினான். தக்கன், பிரமனின் புத்திரர்களில் ஒருவன் என்றும், பிரமனின் கட்டை விரலிற் பிறந்தவன் என்றும் கூறுவர். தக்கன் செய்த தவத்தைக் கண்ட சிவபெருமான், அவன் முன்தோன்றிய பொழுதுதான் உமாதேவியாரை மகளாகப் பெறவும், சிவபிரானை மருமகனாக அடையவும் வரம் வேண்டினான். வேண்டுவார் வேண்டியவற்றைத் தருபவன் ஈசன். அதனால் தக்கன் கேட்ட வரத்தை மறுக்காமல் ஈசன் வழங்கியருளினார். உமாதேவியாரும் வந்து தக்கனுக்கு மகளாகப் பிறந்தார்.

தெய்வக் குழந்தைக்குத் தாட்சாயணி எனத் தக்கன் பெயரிட்டு, அன்போடு வளர்த்துச் சிவபெருமானுக்குத் திருமணம் நிறைவேற்றினான். தாட்சாயிணி மாசி மகத்தன்று திருவவதாரம் செய்தமையால், தேவியின் பிறந்த தினமான அந்தப் புனித நாள் மகத்துவம் பெறுகின்றது.

மாசி மகம் - தேவியின் விழாவாகவும், தேவியை நோக்கிய விரதமாகவும் இந்துக்களால் காலந்தோறும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. அம்பாள் ஆலயங்களில் மாசி மகத்தன்று விசேட பூசைகள், விழாக்கள், திருஉலாக்கள், திரு ஊஞ்சல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

தென்னிந்தியாவில் கும்பகோணத்தல் மாசி மக உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகாமகம் வருகிறது. அந்தப் புண்ணிய நன்நாளில் - கும்ப கோணத்தில் புனித நதியில் தீர்த்தமாடி, தங்கள் பழம் வினைகளைப் போக்கி, நலம் பெற பல லட்சக்கணக்கான பக்தர்கள் எதிர்பார்த்திருப்பார்கள்.

வட இந்தியாவில் 'கும்பமேளா' எனும் விழா வெகு விமரிசையாக இந்தக் காலப்பகுதியில் கொண்டாடப்படுகிறது. கும்ப மாதம் என்பது மாசிமாதம். எனவே, கும்பமேளா என்றால், மாசிமாதத்தில் நடைபெறுகின்ற விழா எனப் பொருள்படும்.

மாசி மகம் கூட தீர்த்தத்தோடு தொடர்புள்ள புனித நாளாகக் கொள்ளப்படுகிறது. கும்பகோணம் மாசி மகத் தீர்த்தத்துக்கு விசேடம் பெற்றுள்ள திருத்தலமாகச் சொல்லப்படுகிறது.

கங்கை, கோதாவாரி, நர்மதை, சிந்து, சரஸ்வதி, மதுரா, மாயா, அவந்தி, கோடிதீர்த்தம் பஞ்சநதம், யமுனை, பாபநாசம், சேது போன்ற தீர்த்தங்களும் தீர்த்த மகிமை பெற்றவை. இந்தத் தீர்த்தங்களில் மாசி மகத்தன்று தீர்த்தமாடினால் பக்தி மேலோங்கி வரும், கீர்த்தி பெருகி வரும்.

மாசி மகத்தில் தீர்த்தம் ஆடல் எவ்விதம் சிறப்பைப் பெற்றது என்பதற்குப் புராண வரலாறு ஒன்று கூறப்படுகிறது. ஒருமுறை சமுத்திர ராஜனான வருண பகவானுக்குப் பிரம்ம ஹத்தி தோசம் ஏற்பட்டுவிட்டது.

அப்பொழுது அவர் கட்டப்பட்டுக் கடலில் போடப்பட்டிருந்தார். வருண பகவான் தொழிற்படாமையால் உலகில் மழையின்றி வரட்சியும், பஞ்சமும் ஏற்பட்டது. உயிர்கள் துன்புற்றன. தேவர்கள் உடனே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடம் சென்று, வருண பகவானை விடுவிக்கும்படி வேண்டிப் பிரார்த்தித்தனர்.

சிவபிரானும் இரக்கம் கொண்டு வருண பகவானை விடுவித்து அருளினார். வருண பகவான் விடுதலை பெற்ற பெருநாள் மாசி மக திருநாளன்று ஆகும். ஈடேற்றம் பெற்று விட்ட மகிழ்ச்சியில் வருணபகவானும், எம்பெருமானை வரம் ஒன்று தருமாறு வேண்டி நின்றான். தனது பிரம்ம ஹத்திப் பிணி தான் சமுத்திரத்தில் - நீரினுள் இருந்தபடியே சிவமூர்த்தியை வணங்கியமையால், நீக்கம் பெற்றது போன்று மாசி மகத்தினத்தன்று புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி நீராடி, இறைவனை வழிபாடு செய்யும் அடியார்களுக்கு அவர்களின் பாவவினைகள், பிறவிப் பிணிகள், துன்பங்கள் யாவும் நீங்கப் பெற்று - அவர்கள் உய்வு பெறத் திருவருள் பாலிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான்.

. சிவபிரானும் - வருணன் கேட்ட வரத்தை வழங்கியருளினார். மாசி மகத்தன்று தீர்த்தமாடல் இந்த வகையில் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது.

இறைவனுக்கும், இறைவிக்கும் உவப்பான மாசி மகப் புண்ணிய தினத்தில் புனித நீராடி, வழிபாடு செயது, விரதம் அனுஷ்டித்து இயன்ற தான தருமங்களைச் செய்து, ஒழுக்கம் பேணி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுதல் செய்வோமாக.

## தவக்கால நற்சிந்தனை

'நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய்' (மத்14:31)



'மனிதனின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான். ஆசை துன்பத்தைத் தரும்'. பேராசை பெருந்துன்பத்தைத் தரும் என்றார் ஒரு பெரியார். இதற்கு ஒரு இளைஞன் 'அப்படியானால் ஆசைப் படுவது தவறா?' என்று கேட்டான். 'ஆசைப்படுவது தவறல்ல. ஆனால், கடலளவு ஆசையை மனிதன் வளர்த்துக்கொள்ளும் போதுதான் துன்பங்கள் பெருகுகின்றன' என்றார். 'அது சரி. துன்பங்கள், துயரங்கள் நீங்க வழிதான் என்ன' என்றான். 'உன் முழுநம்பிக்கையையும் இறைவன்மேல் வைத்து, அமைதியான மனம் பெறுகின்றபோது அவைகள் விலகுகின்றன' என்றார் பெரியவர். ஆம். மனித வாழ்வின் செயற்பாடுகள் அனைத்துமே நம்பிக்கையின் அடிப்படையில்தான் நடக்கின்றன. நமக்குப் பரிமாறப்படும் உணவில் நம்பிக்கையில்லை என்றால் உண்ணுவோமா? பயணம் தொடங்கும்போது போய்ச் சேருவோம என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் பயணிப்போமா? இந்த நம்பிக்கையும் இறைமனித உறவில் அமையவில்லை என்றால் நிறைவு பெறாது.

= மோ.தார்சீசியஸ் =

# காஷ்மீரில் தொடரும் பனிப்பொழிவால் இறந்தோர் தொகை 230 ஆக உயர்வு!



**இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரில் பெய்துவரும் கடும் பனிப்பொழிவில் சிக்கி உயரிழந்தோரின் எண்ணிக்கை 230 ஆக உயர்ந்துள்ளதாகவும் நூற்றுக்கணக்கானோர் காணாமற் போயுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.**

**பனிப்பொழிவால் பாதிக்கப்பட்ட காஷ்மீரின் தென்பகுதி மாவட்ட மான அனந்தங்கிலுள்ள பொதுமக்களின் வீடுகளில் இருந்து இதுவரை 40 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.**


வானம் தற்போது தெளிவாக வந்துள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. ஆனால் வெப்பமான காலநிலை பனிப்பாறைகளை உருகச் செய்வதால் பெருமளவில் பாதிப்புக்களை ஏற்படுத்துமென அரச அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இதனால் பொதுமக்கள் அனைவரையும் உடனடியாகவே உயரமான பகுதிகளில் குடியமருமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இந்தப் பனிப் பொழிவினால் பெருமளவான வீடுகள் பனிப் படலமாகவே காட்சியளிக்கின்றன. அத்துடன் ஜம்மு – ஸ்ரீநகருக்கான பிதான வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இந்த வீதியை போக்குவரத்துக் கேற்ற வகையில் மாற்றுவதற்கு ஒரு வார காலம் எடுக்குமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை பாகிஸ்தான் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரின் மூன்று பிரதேசங்களுக்கான போக்குவரத்துத் தொடர்புகள் முற்றாகத் தடைப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் ஒருலட்சத்து ஐம்பதினாயிரத்திலிருந்து இரண்டு லட்சம் மக்கள்வரை இம் மூன்று பிரதேசங்களிலும் வாழ்ந்து வருவதாகவும் இவர்களுக்கான உணவு மற்றும் பிற விநியோகங்களை செய்யமுடியாதுள்ள நிலையில் அதிகாரிகள் உள்ளனர் எனவும் பி.பி.ஸியின் அல்பிகார் அலி இன் தெரிவித்தார்.

# பங்களாதேஷில் படகு விபத்து; 120 சடலங்கள் இதுவரை மீட்பு!



பங்களாதேஷில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்தவர்களில் 120 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டதுடன் மீட்புப் பணிகள் யாவும் நிறைவடைந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்த போதிலும், காணாமற் போன தமது உறவினர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையில் பெருமளவானோர் ஆற்றங் கரைப் பகுதியில் கூடியுள்ளனர்.

இந்தப்படகு விபத்துக்குள்ளான பகுதியில் முழுமையாக தேடுதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அங்கு மேலதிகமாக எவ்வித சடலங்களும் இல்லையெனவும் லெப்.கொமாண்டர் மஃபூர் ரசீத் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான படகில் 300 பயணிகள் இருந்திருக்கலாமென இந்தச் சம்பவத்தில் உயிர்தப்பியவர்கள் தெரிவித்தனர். ஆனாலும், படகில் எத்தனை பேர் பயணம் செய்தனர் என்பதைத் தம்மால் கூறமுடியாதெனவும், இதற்கு காரணம் படகில் பயணம் செய்பவர்களின் விபரங்கள் பதியப்படுவதில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை டாக்காவிலிருந்து கிழக்கு நகரான சாத்பூருக்கு பயணிகளை ஏற்றிச்சென்ற எம்.வி மகாராஜா என்ற படகே கடும் காற்றுக் காரணமாக விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் மீட்புப் பணிகள் பெரு மழையால் பாதிப்பு



ஈரானில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு அங்கு பெய்து வரும் கடும்மழை தடையாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் பூமியதிர்வினால் பாதிக்கப்பட்ட கெர்மன் மாகாணத்துக்கு அதிகாரிகள் செல்வதற்கான முயற்சியை மேற்கொண்டுவருகின்றனர்.

பெருமளவான பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுமுன்தினம் திறந்த வெளியில் பெரும் அச்சத்துடன் இரவைக் கழித்தனர். பூமி அதிர்வினால் பாதிக்கப்பட்ட மலைப்பகுதி பிரதேச மக்களுக்கு போக்குவரத்து செய்ய முடியாத காரணத்தினால் எவ்வித உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லையென கெர்மன் மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் தொடர்ந்தும் பெய்து வரும் கடும் பனிப்பொழிவு மற்றும் மழை காரணமாக அவசர மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மீட்புப் பணிகளில் ஈரானிய செஞ்சிலுவைச் சங்க பணியாளர்கள் மோப்ப நாய்களையும் ஈடுபடுத்தி வருகின்றனர்.

இதேவேளை ஈரானில் இடம்பெற்ற பூமியதிர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் அமெரிக்காவும் ஐ.நா. அமைப்பும் உதவியளிக்க முன்வந்தபோதும் ஈரான் அதனை நிராகரித்துள்ளது.

# இந்தோனேஷிய விமான விபத்தில் பதினாறு பேர் உயிரிழந்தனர்!

இந்தோனேஷியாலில் கடந்த சில நாட்களாகவே இயற்கையின் சீற்றங்களும், விபத்துக்களும் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. கடந்த டிசம்பர் மாதம் பூகம்பம், சுனாமி பேரலைகள் வந்து பெரும் பொருள் சேதத்தையும், உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தியது. இதேபோல் கடந்த சனிக்கிழமையும் பூகம்பம் ஏற்பட்டுக் கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை ஒரு விமானம் விழுந்து நொருங்கியது. இந்தோனேஷியாவின் வடக்கு கடற்கரையில் உள்ளது சார்மி நகரம். இங்குள்ள விமான நிலையத்தில் இருந்து 18 பயணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு குட்டி விமானம் புறப்பட்டுச் சென்றது.


ஏற்கனவே, அந்தப் பகுதியில் கடந்த சில நாட்களாகப் பலத்த மழை பெய்துவந்தது. விமானம் புறப்படும் போது அது ஓடுபாதையில் வழுக்கிய படி சென்றது.

புறப்பட்ட சில நிமிடங்களில் அந்த விமானம் நிலை தடுமாறியது. தாறுமாறாகப் பறந்த அந்த விமானம் பட்டிலா மாவட்டத்தில் உள்ள கடலில் விழுந்து நொருங்கியது.

இதில் விமானத்தில் இருந்தவர்களில் 16 பேர் பலியாகிவிட்டனர். 2 பேர் காயங்களுடன் தப்பிவிட்டனர்.

விமானத்தின் நொருங்கிய பாகங்கள் கடலில் மிதக்கின்றன. மீட்புப் படையினர் பலியானவர்களின் உடல்கள் மற்றும் விமானப் பாகங்களை மீட்டு வருகின்றார்கள். இந்த விமானம் இந்தோனேஷிய பொலிஸாரால் இயக்கப்பட்டு வந்ததாகத் தெரிய வந்துள்ளது.

# ஈராக்கின் புதிய பிரதமராக ஜபாரியின் பெயர் தெரிவு!



ஈராக்கில் புதிய அரசை அமைப்பதற்காக கடந்த மாதம் தேர்தல் நடைபெற்றது. இதில் தற்போதய இடைக்கால பிரதமர் இயத் அலாவி கூட்டணி 14 வீத வாக்குகளை மட்டுமே பெற்றது. அவருக்கு எதிரான ஷியா கூட்டணி 48 சதவீத வாக்குகளை பெற்றது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டும் யார் புதிய பிரதமர் என்பதில் இழுபறி நிலவிவந்தது. இந்நிலையில் பிரதமர் பதவிக்கு இஸ்லாமிய தாவா கட்சியின் தலைவரான இப்ராகிம் அல்ஜபாரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக ஷியா கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இக்கூட்டணிக்குள் இவருக்கு போட்டியாக அகமது சலாபி என்பவர் இருந்தாலும் இப்ராகிம் ஜாபாரிக்கு அமெரிக்காவின் ஆதரவு இருந்ததால் சலாபி போட்டியிலிருந்து விலகிக்கொண்டார்.

இதையடுத்து ஷியா கூட்டணியின் 140 உறுப்பினர்களும் இப்ராகிம் ஜபாரியை ஏகமனதாக தேர்ந்தெடுத்தனர். ஈராக்கின் புதிய பிரதமராக இப்ராகிம் ஜாபாரி பொறுப்பேற்கப்போவது உறுதியாகியுள்ளது.

# செச்சினிய போராளிகளின் 1 மாத போர்நிறுத்தம் முடிவு



செச்சினிய போராளிகளால் கடந்த ஒரு மாதமாக அமுல் படுத்தப் பட்டுவந்த போர்நிறுத்த நடைமுறை நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

இந்தப் போர்நிறுத்தத்தின் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தையை ரஷ்ய அதிகாரிகளுடன் நடத்தவும் பேராளிகள் அழைப்பு விடுத்ததனை மொஸ்கோ ஆதரவுடனுள்ள குரொஸ்னி அதிகார சபை நிராகரித்துவிட்டது.

தமது இந்த போர்நிறுத்தமானது நீண்டகால போரை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நல்லதொரு முயற்சியென போராளிகள் தெரிவித்தனர். ஆனால், தற்போதும் படையினருக்கும் கிளர்ச்சிவாதிகளுக்குமிடையே மோதல் இடம் பெற்ற வண்ணமே உள்ளதாகவும்– கடந்த திங்கள் இரவும் தலைநகர் குரொஷ்னிக்கு அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் 9 ரஷ்யப் படை வீரர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகத்திற்கிடமான வகையிலுள்ள கிளர்ச்சிவாதிகளின் நடமாட்டங்கள் செச்சின்யாவின் வடக்கு கொக்கஸ்ஸஸ் மலைப் பிராந்தியத்தில் தென்பட்டால் தாக்குதல் நடத்துமாறு ரஷ்ய அதிபர் புடின் உள்துறை அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

பதிப்புத்துறை வல்லுனர்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு !
¥ உங்கள் தேவைகளை உங்கள் மண்ணிலேயே தரமாகச் செய்து பெற்றுக்கொள்ள...
¥ நீங்கள் விரும்பிய அளவுகளில் உங்கள் எண்ணம்போல் நிறம்பிரித்தல் சேவையினை ( Colour Separation - Positive) 24 மணிநேரமும் செய்து பெற்றுக் கொள்ள...
¥ அதி நவீன தொழில்நுட்பத்துடன் குறுகிய மணித்துளிகளில் உங்கள் கைகளில் பிரதிகளைப் பெற்றிட...
KUNA
Digital Imagine & Digital Printing
பிரதான சாலை கிளிநொச்சி
உங்களின் எண்ணம் எங்களின் கைவண்ணம்
யாழ். நகரில் எமது முகவராண்மை பெற்றோர்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ். நகரில் எமது நிறுவனத்தின் சேவைகளை சுரபி பதிப்பகத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உதவிகள்!

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியது

(முல்லைத்தீவு)

சுனாமி அனர்த்தத் தினால் பாதிப்புற்ற முன்பள்ளி ஆசிரியர்களின் 60 ஆம்நாள் நிறைவை முன்னிட்டு பாதிப்புற்றவர்களுக்கான உதவு தொகை வழங்கல் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழக அன்பளிப்புடனும், தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியக அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் நடத்திய இந்த நிகழ்வுக்கு கட்டமைப்பின் உப தலைவர் சிவனேசன் தலைமை வகித்தார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் –பொதுச் சுடரினை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சிவஞானம், பிரதேச கட்டமைப்பு தலைவர் சுரேஸ்குமார் ஆகியோர் ஏற்றி வைத்த னர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும், தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடியினை கழகத்தின் உதவி நிதிப்பொறுப்பாளர் செல்வமும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை கட்டமைப்பு யாழ்.மாவட்ட இணைப்பாளர் செல்வி அஞ்சலியும் ஏற்றிவை த்தனர்.

முல்லைக்கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், கட்டமைப்பின் மாவட்டத் தலைவருமான வே. ஜெயம் சபாபதி வவேற்புரையை நிகழ்த்திய இந்த நிகழ்வில் சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன், யாழ்.மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவுப் பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு முன்பள்ளி ஆசிரியர்களின் குடும்பத்தினருக்கு தலா பதினையாயிரம் ரூபா வீதம் அறுபதாயிரம் ரூபா உதவு தொகை வழங்கப்பட்டதுடன், பாதிப்புற்ற 83 ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் சே.பாண்டியனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முல்லை மாவட்ட அரசியற்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் வேழினி, முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மூர்த்தி, சிறுவர் நலன் திட்டப் பொறுப்பாளர் ரவி, பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறையாளன், முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், கட்டமைப்பு நிர்வாக உறுப்பினர்கள், பெற்றோர்கள், புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நீதிமன்ற வளாகத்தில் விசேட பாதுகாப்பு முறை!

(கொழும்பு)

நீதிமன்ற வளாகங்களுக்குள் குற்றச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதி அமைச்சர் ஜோன் செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

நீதிமன்ற வளாகத்திற்குள் இடம்பெறும் வன்செயல்கள், நாட்டின் நீதித்துறைக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சந்தேக நபர்களை நீதிமன்றிற்கு அழைத்து வராமல் சிறைச்சாலையில் வைத்து விசாரணை செய்வதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் சிரேஷ்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# போராளி வீரச்சாவு

(கிளிநொச்சி)

மாங்குளம் பகுதியில் 1998 ஆம் ஆண்டு படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த போராளி ஒருவரின் விபரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

லெப். மஞ்சரி (கந்தசாமி சசிதேவி அல்லது சுதா – வீ.என்.கமம், வெலிக் கண்டல் ,கண்டாவளை) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## சமாதானத்தை...

கப்பட்டுள்ள கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கும் இடமளிக்கப்படவேண்டிய தன் அவசியம் பற்றி ஹக்கீம் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சிவில் சமூகத்துடன் மேற்கொண்டுவரும் சந்திப்புக்கள்குறித்து நோர்வேப் பிரதி நிதியிடம் ரவூப் ஹக்கீம் அதிருப்தி வெளியிட்டதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை எரிக் சொல்ஹெய்ம் நேற்று நிதி அமைச்சர் சரத் அமுனுகமவை சந்தித்து இலங்கையில் சுனாமி தாக்கத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின் பகுதிக்குள்...

இடம்பெற்றதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் ஜே.எச்.யு. விஜயசுந்தர என்ற இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதுடன், அவருடன் சென்ற லான்ஸ்கோப்ரல் டபிள்யு.எம். பிரியதர்சன என்பவர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

மேற்படி படையினர் புலிகளின் பிரதேசத்துக்குள் நுழைந்ததை பாதுகாப்பு உயரதிகாரிகள் ஒப்புக் கொண்டபோதும் – அவர்கள் தாக்குதல் நடத்துவதற்காக உள்நுழையவில்லை என்று தெரிவித்தனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தகவல் வெளியிடுகையில் –

கிளாலிப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகள் மற்றும் படையினரின் பாதுகாப்பு நிலைகளுக்கு இடையில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இரண்டு படையினர் விடுதலைப் புலிகளால் சுடப்பட்டனர். இதில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. மற்றொருவர் காயமடைந்துள்ளார். இவர் பின்னர் பலாலியிலுள்ள இராணுவ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

காயமடைந்த நிலையில் திரும்பி வந்த படைச்சிப்பாய் மற்றவர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தார். நாம் படையினர் மீது நடத்திய பூர்வாங்க விசாரணையிலும் அவர் கொல்லப்பட்டதாகவே தெரியவருகிறது. துப்பாக்கிச்சூடு இடம்பெற்றதால் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு படையினர் செல்லமுடியவில்லை.

இதனால் இந்தப் படைச் சிப்பாயின் உடலையும் மீட்கமுடியவில்லை.

இது ஒரு போர்நிறுத்த மீறல் என்பதால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அங்கு சென்று விசாரணை நடத்தும்வரை நாம் காத்திருப்போம். அவர்கள் அங்கு வந்த பின்னர் எல்லா விபரங்களும் தெரியவரும்.

படையினரதும் விடுதலைப் புலிகளினதும் நிலைகளுக்கு இடைப்பட்ட பகுதிக்குள் படையி னர் செல்வதில் எவ்வித தடையுமில்லை. இரண்டு தரப்புக்களும் அந்தப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட தூரம்வரை செல்லலாம். படையினருக்கென அவர்களது பகுதி உள்ளது. புலிகளுக்கென அவர்களது பகுதி தனியாக உள்ளது. இராணுவ சூனிய பகுதியொன்றும் உள்ளது. இந்தச் சம்பவம் எந்த இடத்தில் நடைபெற்றதெனத் தெரிந்துகொள்ள நாம் பொறுத்துத்தான் ஆகவேண்டும். படையினர் தமது காவலரணிலிருந்து சற்றுத்தள்ளிச்சென்று பார்வையிடுவது வழக்கம்.

தற்போது இங்கு இருட்டி விட்டதால் இந்தச் சம்பவம் எங்கு இடம்பெற்றதென்பதனை மிகச் சரியாகக் கூறுவது சிரமமாக உள்ளது. ஆனால், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் இங்கு வரும்போது சம்பவம் நடந்த மிகச்சரியான இடத்தை நாம் கண்டறிவோம். அதேநேரம் இராணுவத் தளபதியும் என்ன நடந்தது என்பதனைக் கண்டறிவதற்காக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

என்ன நடந்தது என்பதனை இராணுவ ரீதியாகக் கண்டறிவதற்கே இந்த விசாரணை. இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவம் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

கட்சியின் பிரதேச சபை, நகரசபை, மாகாணசபை உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா கலந்துகொள்ளவில்லையென்றும் அமைச்சர் டி. எம் ஜெயரட்ண விடம் இது குறித்த மனு கையளிக்கப்பட்டதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்திருக்கிறது. ஆனால், ஜீக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது வேட்பாளரை நியமிக்கவில்லை. இதனால் கட்சியின் நலன் பாதிக்கப்படும்.

எனவே, உடனடியாக மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்தக் கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (01)

## முகாமைத்துவ...

தட்டெழுத்தாளர், கணக்குப் பதிவாளர், காசாளர், களஞ்சியப் பொறுப்பாளர், சுருக்கெழுத்தாளர் போன்ற பதவிகள் புதிய திட்டத்தின் கீழ் இரத்துச் செய்யப்பட்டுள் ளன.

இதனடிப்படையில் மூன்றாம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு 5 சம்பள அதிகரிப்புகள் வழங்கப்படவுள்ளன. அதுபோன்று இரண்டாம் தரத்திலுள்ள சிரேஷ்ட எழுதுவினைஞர் மற்றும் தட்டெழுத்தாளர் ஆகியோருக்கு புதிதாக 7 சம்பள அதிகரிப்புகள் வழங்கப்பட்டு, முதலாவது தரத்திலுள்ள பிரதான எழுதுவினைஞருக்கும் ஏனைய முக்கிய அரச ஊழியருக்கும் இரண்டு சம்பள அதிகரிப்புகள் வழங்கப்படவுள் ளன.

இதேவேளை –பொதுநிர்வாக அதிகாரிகள் பதவியிலிருந்து முகாமைத்துவ சேவையில் இணைந்துகொள்பவர்களுக்கு இவ்வாறான சம்பள அதிகரிப்புகளை வழங்குவது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## அரசின்...

சுக்களை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் 2000 ஆம் ஆண்டில் இடைக்கால நிர்வாகம் தொடர்பான முதலாவது மாற்று யோசனை முன்வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஐக்கிய தேசிய முன்னணி இந்த விடயம் தொடர்பாக மூன்று யோசனைகளை வெளியிட்டது. எனினும், தற்போதைய அரசாங்கம் மாற்று இடைக்கால நிர்வாக சபை யோசனை ஒன்றை விடுதலைப் புலிகளிடம் முன்வைத்துள்ளது.

இடைக்கால நிர்வாகசபை ஒன்று உருவாக்கப்படுவதன் மூலம் வடக்கு–கிழக்கு மாகாண புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படும் அதே வேளை, நிரந்தரத்தீர்வுகுறித்த நகர்வுகளையும் முன்னெடுக்கமுடியும் என்று அரசாங்கம் கருதுவதாகவும் தனபால குறிப்பிட்டார்.

இதேவேளை – சுனாமி அனர்த்த நிவாரணங்களைக் கையாள்வது தொடர்பாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விரைவில் இணக்கப்பாடு ஏற்படும் நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக நோர்வே ஏற்பாட்டாளர்களின் அனுசரணையுடன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன.

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனர்த்த நிவாரணப் பணிகளில் இணைந்து செயற்படுவது மற்றும் சர்வதேச நிவாரண உதவிகளைக் கையாள்வது தொடர்பாக இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் விதமாக விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் கூறினார்.

# மரண அறிவித்தல்கள்



நாட்டுப்பற்றாளர்

## வே.க.ஏரம்பு

அருனோதயம்-புங்குடுதீவு

நேற்றைய தினம் (23-02-2005) இயற்கை எய்தியுள்ளார். இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும் அருணாதேவி, பிரிதரன், மதிவதனி, பாலச்சந்திரன் (மாவீரர்) ஆகியோரின் தந்தையும் குமாரதாஸ், சாந்தினி, பிரபாகரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். இவரது உடல் இன்று நண்பகலில் இருந்து அரசியல் துறை-தூயவன் அரசறிவியல் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதி நிகழ்வு பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

## காத்தமுத்து கந்தசாமி

உடுத்துறை, கொடுக்குளாய் வீதியைச் சேர்ந்த காந்தமுத்து கந்தசாமி 23.02.2005 (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், செல்லத்தம்பி (திருச்சி), முத்துராஜா (கனடா), சரஸ்வதி (கனடா), துரைசிங்கம் (கனடா), வதனா, காந்தமணி (திருச்சி), இந்திராணி, கன்னிகாராணி, நிறைமதிகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமுதமலர் (திருச்சி ), பவானி (கனடா), சந்திரலிங்கம் (கனடா), சியாமளாதேவி (கனடா), நடராஜசுந்தரம், பாலசுந்தரம் (லண்டன்), செயபாலசிங்கம் (இத்தாலி), அருள்நேசன், அருள்மதி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.02.2005 (வியாழக்கிழமை) பி.ப. 2 மணிக்கு அன்னாரின் தற்காலிக வசிப்பிடமான ரங்கூன் இல்லம் தம்பசிட்டி, பருத்தித்துறையில் நடைபெற்று சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- க.முத்துராஜா
(மகன்)

(சி.3844)

JAFFNA DISTRICT CRICKET ASSOCIATION
யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம்

அறிவித்தல்

வருடாந்த பொதுக்கூட்டம் - 2005

திகதி :- 06.03.2005 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை 10 மணி (இலங்கைநேரப்படி)
இடம் :- கிறிக்கற் அக்கடமி
310, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C 3842) செயலாளர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.